வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu

Email : news@eelanadu.lk
மலர் : 03 08.09.2022 வியாழக்கிழமை இதழ் : 273 பக்கங்கள் : 16


மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram money transfer மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

# அமைகிறது தேசிய சபை சகல கட்சிகளும் ஒப்புதல்

கொழும்பு, செப்ரெம்பர் 08

**பாராளுமன்றத்தில் அனைத்துக் கட்சிகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் 37 உறுப்பினர்களைக் கொண்ட தேசிய சபைக்கு கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.**

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார மற்றும் சமூக நெருக்கடிகளை தணிக்கும் வகையில், 'தேசிய சபை' அமைப்பது தொடர்பில் தீர்மானிக்கும் கட்சித் தலைவர்கள் கூட்டம் பிரதமர் தினேஷ் குணவர்த்தன தலைமையில் நேற்று நடந்தது.

பாராளுமன்ற கட்டத்தில் இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில் பாராளுமன்ற பிரதிநிதித்துவம் கொண்ட அனைத்துக் கட்சிகளின் தலைவர்கள் - பிரதி

15

## 30 இராஜாங்க அமைச்சர்கள் இன்று பதவியேற்பார்கள்?

கொழும்பு, செப். 08

இராஜாங்க அமைச்சர்களாக இன்று சிலர் பதவியேற்பர் என்று அரச உயர்வட்டாரங்கள் தெரிவித்தன.

புதிய இராஜாங்க அமைச்சர்களாக 30 பேர் இன்று காலை ஜனாதிபதி முன்னிலையில் பதவியேற்பார்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

ஆனாலும், இந்தத் தகவலை அரசாங்கத் தரப்பு உத்தியோகபூர்வமாக வெளியிடவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (ஐ)

## இலங்கை கடனை மறுசீரமைக்க அமெரிக்கா உதவுவதற்கு தயார்!



வாஷிங்டன், செப். 08

இலங்கையின் கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகளுக்கு உதவுவதற்கு தயார் என அமெரிக்க திறைசேரி செயலாளர் ஜனெட் யெலென் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் கடன்மறுசீரமைப்பு நடவடிக்கைகளுக்கு அமெரிக்கா உதவும். பாரிஸ் கிளப் கொள்கைகளின் அடிப்படையில், நிதி உத்தரவாதங்களை வழங்கும் என தெரிவித்துள்ள அவர் இலங்கை தொடர்பில் உலக வங்கி உட்பட சர்வதேச நாணய நிதியம் உட்பட சர்வதேச நிதியமைப்புகள் மற்றும் அமெரிக்க அமைப்புகளுடன் பேச்சுகளை மேற்கொள்ளும் எனவும் தெரிவித்துள்ளார்.

15



## பிரிட்டன் அமைச்சராக ரணில் ஜெயவர்த்தன!

லண்டன், செப். 08

சுற்றாடல், உணவு மற்றும் கிராமிய விவகாரங்களுக்கான பிரித்தானிய இராஜாங்க செயலாள

15

## இலங்கையை சர்வதேச நீதிமன்றில் பாரப்படுத்தும் முடிவை எடுங்கள்!

### மனித உரிமை நாடுகளை கோருகிறார் சுமந்திரன் எம். பி.

யாழ்ப்பாணம், செப். 08

"இலங்கை தொடர்பான உண்மை நிலவரங்களை ஓரளவுக்கேனும் வெளிப்படுத்தி ஐ. நா. மனித உரிமைகள் ஆணையாளர் காட்டமான அறிக்கையை வெளியிட்டுள்ள நிலையில், இதனை அடிப்படையாகக் கொண்டு இலங்கை விடயத்தை ஐ. நா. பாதுகாப்பு சபை மூலம் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திடம் (ஐ. சி. சி.) அதனைப் பாரப்படுத்தும் விதத்திலான தீர்மானம் ஒன்றை எடுங்கள்."

- இவ்வாறு ஐ.நா. மனித உரிமைகள் சபையின் உறுப்பு நாடுகளைக் கோரியிருக்கின்றார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன்.

ஐ. நா. மனித உரிமைகள் பேர

15

## பைசர் தடுப்பூசிகள் ஒக்ரோபரில் காலாவதி!

கொழும்பு, செப். 08

இலங்கைக்கு கொண்டு வரப்பட்டுள்ள பைசர் தடுப்பூசிகளின் கையிருப்பு ஒக்ரோபர் மாத இறுதிக்குள் காலாவதியாகும் என அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

நேற்று பாராளுமன்றத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கிங்ஸ் நெல்சனின் கேள்விக்கு பதிலளித்தபோதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

ஆபத்து அதிகரிக்கும் முன் இந்தத் தடுப்பூசியை எடுத்துக் கொள்ளுங்கள்

15



பிரசித்தி பெற்ற தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோயில் தேர்த்திருவிழா நேற்று இடம்பெற்றவேளை...!

## 13 தமிழ் அரசியல் கைதிகள் உண்ணாவிரத போராட்டம்!

கொழும்பு, செப். 08

பயங்கரவாத தடைச் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள 13 தமிழ் அரசியல் கைதிகள் தமது விடுதலையை வலியுறுத்தி உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

கொழும்பு - மகசின் சிறைச்சாலையில் இவர்கள் 13 பேரும் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் பாராளுமன்றில் தெரியப்படுத்தினார்.

இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட தமிழ் அரசியல் கைதிகள் தொடர்ந்தும் பல ஆண்டுகளாக தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். தமிழீழ விடுதலைப்புலிகளை மீளுருவாக்கம் செய்தனர்

15

## இலங்கையின் மனித உரிமை மீறல்களை சுட்டும் வரைபடம்!

### கனடா அமைப்பு வெளியிட்டுள்ளது

ஒட்டாவா, செப். 08

உள்நாட்டு மோதலின் போது (1983- 2009) இலங்கையில் மனித உரிமைகள் மீறல்கள் இடம்பெற்ற பகுதிகளை சுட்டிக்காட்டும் வரைபடம் ஒன்றை கனடாவை சேர்ந்த பொதுநல பரப்புரை நிலையம் (The Public Interest Advocacy Centre) என்ற அமைப்பு வெளியிட்டுள்ளது.

இலங்கையில் இடம்பெற்ற ஆயிரக்கணக்கான மனித உரிமைகள் மீறல்கள் இடம்பெற்ற திகதிகள், பாதிக்கப்பட்ட நபர்கள், அவர்களின்

15

## 'யுனிசெவ்' அறிக்கையை நிராகரித்தது அரசாங்கம்!

கொழும்பு, செப். 08

இலங்கையில் சிறுவர் மந்த போசணை அதிகமாக வுள்ளதாக யுனிசெவ் நிறுவனத்தால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையை நிராகரிப்பதாகவும், அதற்காக பயன்படுத்திய தரவுகள் திருப்திகரமானதாக இல்லை என்றும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் சுகாதார அமைச்சு வெளியிட்ட அறிக்கையில்,

இலங்கையில் சிறுவர் மந்த போசணை தொடர்பில் யுனிசெவ் நிறுவனத்தினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையை சுகாதார அமைச்சு நிராகரிக்

15

## சான்றிதழ்களுக்கான காலவரையறை நீக்கம்!

கொழும்பு, செப். 08

பிறப்பு, திருமண மற்றும் இறப்பு சான்றிதழ் பத்திர பிரதிகளின் செல்லுபடியாகும் காலத்தை, எவ்வித வரையறைக்கும் உட்படுத்தாது ஏற்றுக் கொள்ளுமாறு பதிவாளர் நாயக திணைக்களம் அதிகாரிகளுக்கு அறியப்படுத்தியுள்ளது.

இதன்படி கல்வி அமைச்சு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு, குடிவரவு - குடியகல்வு திணைக்களம், ஆள்பதிவு திணைக்களம் என்பவற்றுக்கு இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளதாக பதிவாளர் நாயகம் பி. எஸ். பி. அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

தங்கள் நிறுவனங்களில் சேவை பெறுநர்கள், பதிவாளர் நாயக திணைக்களத்திடமிருந்து ஆறு மாதங்களுக்குள் பெற்றுக்கொள்ளப்பட்ட பிறப்பு, திருமண மற்றும்

15

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இப்படியும் நடக்கிறது...!

இந்தக் கதையை எழுதுவதால் ஊர்க்குருவிக்கும் இந்த சகுனம் பார்ப்பது, அதிசயங்களை நம்புவதில் ஆர்வம் இருப்பதாக நினைத்து விடாதீர்கள். இது கதைக்கு மட்டுமே.

ஓர் ஊரில் பத்து விவசாயிகள் இருந்தார்கள். ஒருநாள் அவர்கள் தத்தம் நிலங்களில் உழவு வேலை செய்து கொண்டிருந்தார்கள்.

அப்பொழுது வானம் இருட்டிக் கொண்டு வந்தது. பயங்கர மின்னலுடன் இடி இடித்தது. பயந்து போன அவர்கள் பக்கத்தில் இருந்த ஒரு பாழடைந்த மண்டபத்தில் ஓடி ஒளிந்து கொண்டனர்.

வெகுநேரமாகியும் மின்னல் வெட்டுவதும் இடிஇடிப்பதும் நிற்கவில்லை. அவற்றின் உக்கிரம் வேறு அதிகரித்துக் கொண்டே போனது.

பயத்தில் நடுங்கிக் கொண்டிருந்த விவசாயிகளில் ஒருவன் "நம்மிலேயே ஒரு மகாபாவி இருக்கிறான். அவனைக் குறி வைத்துத்தான் கடவுள் இடியையும் மின்னலையும் ஏவியிருக்கிறார். அந்தப் பாவியை வெளியே அனுப்பிவிட்டால் மற்றவர்கள் பிழைத்துக் கொள்ளலாம்" என்று சொன்னான்.

மற்றவர்கள் இதனை ஆமோதித்தார்கள்.

இத்தனை பேரில் அந்தப் பாவியை எப்படி அடையாளம் கண்டு கொள்வது என்று விவாதம் நடந்தது. விவாதத்தின் முடிவில் தீர்ப்பைக் கடவுளிடமே விட்டு விடுவது என்று முடிவாயிற்று. அதன்படி அனைவரும் தத்தம் தொப்பிகளைக் கையில் பிடித்துக் கொண்டு தொப்பியை மழையில் நீட்டுவது என்று முடிவாயிற்று.

அனைவரும் தத்தம் தொப்பிகளை மழையில் நீட்டினர்.

பயங்கரமான இடி முழக்கத்துடன் ஒரு மின்னல் வெட்டியது. அதில் ஒரு விவசாயியின் தொப்பி மட்டும் எரிந்து சாம்பலாகியது.

மற்றய ஒன்பது விவசாயிகளும் "இவன்தான் பாவி. இவனை முதலில் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளு" என்று கத்திக் கொண்டே அவன் மேல் பாய்ந்தனர்.

அந்த விவசாயி கெஞ்சிக் கதறி தான் அப்பாவி என்று மன்றாடினான். மற்றவர்கள் யாரும் காதில் போட்டுக் கொள்ளவில்லை. அவனை பலவந்தமாகக் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளினர்.

அவன் கதறிக் கொண்டே மழையில் ஓடினான்.

அப்போது அதி உக்கிரமாக ஒரு மின்னல் தாக்கி இடி இடித்தது. ஓடிக்கொண்டிருந்த விவசாயி அதிர்ச்சியில் உறைந்து நின்று விட்டான். சற்று நேரத்தில் நிலைக்குத் திரும்பி மண்டபத்தைத் திரும்பிப் பார்த்தான்.

மண்டபத்தில் இடி விழுந்து நொறுங்கிக் கிடந்தது. ஒரு புண்ணியவானின் புண்ணிய பலத்தில் தப்பித்திருந்த ஒன்பது விவசாயிகளும் அவனை வெளியே தள்ளிப் பாதுகாப்பை இழந்து பரிதாபமாகக் கருகிச் செத்துப் போய் விட்டனர்.

இந்தக் கதையை எதற்காக இன்று தருகின்றேன் என்பதை வாசகர்கள் புரிந்துகொண்டிருப்பார்கள் என்று நம்புகின்றேன்.

புரியாவிட்டால் நேற்றைய தினம் இந்தப் பத்தியில் கடைசியாக எதனைக் குறிப்பிட்டிருந்தேன் என்று நினைத்துப் பார்த்தால் புரிந்துவிடும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் உள்ள பங்காளிக் கட்சிகளான ரெலோ, புளொட் மட்டுமன்றி, தமிழ் அரசுக் கட்சிக்குள்ளும் சில தனிநபர்கள் தன்னிச்சையாக நடந்துகொள்கின்றனர் எனவும் தனிப்பட்ட சந்திப்புக்களை நடத்துகின்றனர் எனவும் குரல் எழுப்பியிருந்த தமிழ் அரசு கட்சியின் மற்றுமொரு பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், அந்த பங்காளிக் கட்சிகளை வெளியே அனுப்பிவிட்டு தமிழ் அரசு தனித்துப் போட்டியிட வேண்டும் என்றும் யோசனை தெரிவித்திருந்ததை ஈழநாடு வாசகர்கள் படித்திருப்பார்கள்.

பங்காளிக் கட்சிகளை வெளியேற்றாவிட்டாலும் அவர்களை எப்படி தோற்கடிப்பது என்றும் அவர் ஒரு யோசனையைச் சொல்லிக் கொடுத்திருக்கிறார்.

அதாவது, தாங்களே (தமிழ் அரசுக் கட்சியே) தேர்தலில் தனியாக மற்றுமொரு சுயேச்சைக் குழுவை களத்தில் இறக்கி பங்காளிக் கட்சிகளை தோற்கடிக்க வேண்டுமாம்.

இதைத்தான் தான் கடந்த உள்ளூராட்சித் தேர்தலில் கிளிநொச்சியில் செய்தாராம், அதனால் மூன்று உள்ளூராட்சி சபைகளையும் தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறாராம்.

சிலவேளைகளில் தடுமாற்றங்கள்- பதற்றங்கள்- நெருக்கடிகள் வருகின்றபோது இப்படி நாமே போட்டுடைப்பதுண்டு.

கட்சியின் அடுத்த தலைவர் ஸ்தானத்திற்கு வரவேண்டும் என்று விரும்புகின்ற ஒருவர், தன்னை அதற்கு தகுதியாகிவிட்டேன் என்று தனது செயல்கள், நடவடிக்கைகள் மூலம் வெளிப்படுத்தவேண்டும்.

அரசியலில் எதனை பொதுவெளியில் சொல்லலாம் என்பதை முதலில் ஒரு தலைவர் தெரிந்துகொள்ளவேண்டும். நானும் கள்ள "வோட்" போட்டனான் என்று சொல்வதுபோல நானே வேட்பாளரையும் இறக்கினேன் என்று சொல்வது நல்ல தலைவருக்குப் பொருத்தமானதல்ல.

இதேபோல, பங்காளிக் கட்சிகளை வெளியே அனுப்பிவிட்டு தமிழ் அரசு தனித்துப் போட்டியிட வேண்டும் என்று சொல்வது, அத்தகைய கூட்டணி ஒன்றை உருவாக்கிய தலைவருக்கு அவர் செய்யும் கைமாறு அவ்வளவுதான்!

பாவியை வெளியே அனுப்பிவிட்டு தாங்கள் தப்ப நினைத்த விவசாயிகளின் கதையை ஞாபகத்தில் வைத்திருந்தால் அனைவருக்கும் நல்லது.!

- ஊர்க்குருவி

# பாடசாலைக்குள் போதைப்பொருள் புத்தகப் பைகளை சோதிக்க முடிவு!

கொழும்பு, செப். 08

பாடசாலைகளுக்கு போதைப் பொருள் கொண்டு வரப்படுவதை தடுக்கும் நோக்கில் பாடசாலை மாணவர்களின் புத்தகப் பைகள் தினமும் காலை பாட சாலைக்குள் நுழையும்போது பரிசோதிக்கப்படவுள்ளது.

இதற்கான சுற்றுநிருபம் அடுத்த வாரத்துக்குள் வெளியிடப்படும் என கல்வி அமைச்சர் சுசில்பிரேமஜயந்த நேற்று பாராளுமன்றில் தெரிவித்துள்ளார்.

பாடசாலை அபிவிருத்திக் குழு, பெற்றோர்கள், பழைய மாணவர்கள், மாணவ முதல்வர்கள் உள்ளிட்டோரின் ஆதரவுடன் அனைத்துப் பாடசாலைகளிலும் காலை வேளை களில் பாடசாலை பைகளை பரிசோதிக்கும் நடைமுறை முன்னர் பின்பற்றப்பட்டதாகக் குறிப்பிட்ட அமைச்சர், இருப்பினும், அறியப்படாத காரணங்களுக்காக இந்த நடை முறை நிறுத்தப்பட்டது எனக் கூறினார்.

பாடசாலை மாணவர்கள் ஊடாக போதைப்பொருள் பாடசாலைகளுக்குள் கொண்டு வரப்படுவது தொடர்பில் சில முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இந்நிலையிலேயே பாடசாலை மாணவர்களின் புத்தகப் பைகள் காலை பாடசாலைக்குள் நுழையும்போது பரிசோதிக்கப்படவுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

## திருமுறை விண்ணப்பம்!

யாழ்ப்பாணம், செப். 08

"சிவநெறிய திருமுறை விண்ணப்பம்" தொடர் 79 இன்று வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

இலங்கை நேரம் இரவு 7 மணிக்கு இடம்பெறும் இந்த நிகழ்வில் யாவரும் இணைந்து கொள்ள முடியும்.

இந்த நிகழ்வில் சூம் செயலி மூலம் 417 892 9023 என்ற அடையாள எண்ணில், 202811 என்ற கடவுச்சொல்லைப் பயன்படுத்தி இணைய முடியும்.

அல்லது, Dr sivasri vythees wara kurukkal என்ற யூ-ரியூப் சனல் மூலமும் பார்வையிட முடியும். (ஐ)

## 'ஏர்முனை' சஞ்சிகை ஆசிரியர் காலமானார்!



வவுனியா, செப். 08

ஏர்முனை இயற்கை விவசாய சஞ்சிகையின் ஆசிரியரும் விவசாயப் போதனாசிரியருமான சூரிய குமாரன் சிவதாஸ் (மாவடியூர்) நேற்று காலமானார்.

இவர் வவுனியா விவசாயத் திணைக்களத்தின் முருகனூர் பண்ணை முகாமையாளராக பணி யாற்றி வந்திருந்தார்.

இவர் ஆசிரியராக இருந்து நடத்திய ஏர்முனை இயற்கை விவசாயம் சார் சஞ்சிகையில் எளிமையான முறையில் விவசாயிகளுக்குப் புரியக்கூடிய இலகுதமிழில் பல்வேறு கட்டுரைகள், பதிவுகளை எழுதி வந்திருந்தார்.

அத்துடன், சமூக மட்டத்தில் பல அமைப்புகளை உருவாக்கி செயல்படுத்தியதுடன், இயற்கை வழி இயக்கத்துடனும் நெருங்கிய தொடர்புகளை கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## விசேட கலந்துரையாடல்!

யாழ்ப்பாணம், செப். 08

"இடைக்கால வரவு - செலவு திட்டமும் இலங்கைப் பொருளாதாரத்தின் எதிர்காலமும்" என்ற தலைப்பிலான சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டத்தின் விசேட கலந்துரையாடல் நாளை மறுதினம் சனிக்கிழமை பி.ப. 4 மணியளவில் இல 62, கே.கே.எஸ். வீதி, கொக்குவில் சந்தியில் உள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையில் இடம்பெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் விசேட உரையை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பொருளியல் துறையின் தலைவர் பேராசிரியர் செ. சந்திரசேகரம் ஆற்றவுள்ளார். தொடர்ந்து சபையோர் கருத்துரைகளுடன் திறந்த கலந்துரையாடல் இடம்பெறும். ஆர்வமுள்ள அனைவரையும் கலந்துகொள்ளுமாறு சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர். (ஐ)



பருத்தித்துறை பிரதேச சபையின் புதிய செயலாளராக அருணகிரி வினோராஜ் நேற்று கடமையைப் பொறுப்பேற்ற அவரை தவிசாளர் அ. சா. அரியகுமார், உப தவிசாளர் கு.தினேஷ், சபை உறுப்பினர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் வரவேற்பளித்தபோது...!

# வல்லிபுர ஆழ்வார் ஆலயம் 24ஆம் திகதி கொடியேற்றம்!

வடமராட்சி, செப். 08

வரலாற்றுப் பிரசித்திபெற்ற வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய வருடாந்த பெருந் திருவிழா எதிர்வரும் 24ஆம் திகதி சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

ஒக்ரோபர் 1ஆம் திகதி குருக்கட்டு விநாயகர் தரிசனமும் மறுநாளான 2ஆம் திகதி வெண்ணைத் திருவிழாவும் அடுத்தநாள் 3ஆம் திகதி துகில் திருவிழாவும் 4ஆம் திகதி பாம்பு திருவிழாவும் இடம்பெறவுள்ளது.

கம்சன் போர்த் திருவிழா ஒக்ரோபர் 5ஆம் திகதி நடைபெறும். 7ஆம் திகதி சப்பரத் திருவிழாவும் மறுநாள், 8ஆம் திகதி தேர்த்திருவிழா அடுத்தநாள் 9ஆம் திகதி சமுத்திரத் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன.

10 ஆம் திகதி காலையில் கேணி தீர்த்தத் திருவிழாவும் அன்று மாலை கொடியிறக்கமும் நடைபெறவுள்ளது.

பெருந்திருவிழாவை சுகாதார விதிகளின்படி நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பில் வெளியிடப்பட்ட அறிக்கையில்,

சுகாதார நடைமுறைகளை பின்பற்றுதல் அவசியமானதாக கருதப்படுகின்றது. பக்தர்கள் ஆசார சீலர்களாக ஆலயத்திற்கு வருகை தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றது. ஆலய சுற்றாடலில் உணவு கையாளும் நிலையங்கள் அமைப்பவர்கள் நாட்டின் எப்பாகத்திலாவது பதிவு செய்யப்பட்ட உணவுச்சாலைகள் நடத்துபவர்களாக இருத்தல் வேண்டும்.

சகல உணவு கையாள்பவர்களும் தாங்கள் பணிபுரியும் பதிவு செய்யப்பட்ட உணவுச்சாலை அமைந்துள்ள பிரதேசத்துக்கான சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையிலிருந்து பெறப்பட்ட மருத்துவச்சான்றிதழ் பெற்றிருப்பதுடன் அதனை தங்களுடன் வைத்திருத்தல் வேண்டும்.(ஐஸ்கிறீம் கடைகள் உள்ளடங்கலாக) பொதுச் சுகாதார பரிசோதகரின் கண்காணிப்புக்கு உட்பட்ட கிணறுகளிலிருந்து பெறப்படும் குடிநீரையே உபயோகத்தில் வேண்டும்.

ஆலயச்சுற்றாடலில் இனிப்புக் கடைகள், கச்சான் விற்பவர்கள் உற்பத்தியை மேற்கொள்ள முடியாது. விற்பனையை மட்டும் செய்யமுடியும். (கச்சான் வறுத்தல் இனிப்பு பண்டங்கள் தயாரித்தல்), அன்னதான மடங்களில் கடமையாற்றுபவர்கள் மருத்துவ சான்றிதழை பெற்றிருக்க வேண்டும்.

சகல கடை உரிமையாளர்களும் ஒவ்வொரு நாளும் வரும் கழிவுகளை வெளியில் வீசாது ஒன்றாகச் சேர்த்து பிரதேச சபை வாகனத்தின் மூலம் அகற்றுதல் வேண்டும், பச்சை குத்துதல், காதுகுத்துதல் போன்ற செயல்பாடுகள் ஆலய சுற்றாடலில் அனுமதிக் கப்படமாட்டாது, போதைவஸ் துப் பொருட்கள், புகைத்தல் மதுபாவனைப் பாவனை, விற்பனை முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது - என்றுள்ளது. (ஐ -2 - 3)

ஈழநாடு
Eelanadu
08.09.2022 வியாழக்கிழமை
பிலவ வருடம், ஆவணி 24

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# 76 வருட கால ஐக்கிய தேசியக் கட்சி?

ஐக்கிய தேசிய கட்சி உருவாக்கப்பட்டு 76 வருடங்கள் பூர்த்தியடைந்திருக்கின்றது. இதனை மகிழ்ச்சியுடன் நினைவுகூரக் கூடிய நிலையில் இப்போது ஐக்கிய தேசியக் கட்சி இருக்கின்றது. காரணம் 2020 தேர்தல் தோல்வியை தொடர்ந்து அதலபாதாளத்துக்கு சென்றிருந்த கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நாட்டின் எட்டாவது நிறைவேற்றதிகார ஜனாதிபதியாக நிகழ்வில் பங்கு கொண்டிருக்கின்றார். ஐக்கிய தேசியக் கட்சியினரைப் பொறுத்தவரையில் இது மகிழ்ச்சிக்குரிய நிகழ்வு.

ஐக்கிய தேசியக் கட்சி அடிப்படையில் ஒரு தீவிர வலதுசாரி அரசியல் கட்சியாகும். டொன் ஸ்டீபன் சேனநாயக்கவால் 1946இல் ஆரம்பிக்கப்பட்ட ஐக்கிய தேசியக் கட்சி இலங்கை சுதந்திரமடைந்ததாகக் கூறப்படும் கடந்த 75 வருடங்களில் 38 வருடங்களை ஆட்சி செய்திருக்கின்றது. ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து பிரிந்து சென்ற சொலமன் வெஸ்ட் ரிட்ஜ்வே டயஸ் பண்டாரநாயக்க 1951இல் சிறீ லங்கா சுதந்திரக் கட்சியை உருவாக்கினார். சிறீலங்கா சுதந்திரக் கட்சியை பண்டாரநாயக்க ஒரு சிங்கள - பௌத்த தேசியவாத கட்சியாக முன்னிறுத்தினார்.

ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் சிறீ லங்கா சுதந்திரக் கட்சி ஆகிய இரண்டு கட்சிகளின் அரசியல் நகர்வுகளும் அதன் விளைவுகளும்தான், இலங்கையின் இதுவரைகால அரசியலாக இருக்கின்றது. ராஜபக்ஷக்கள் கடந்த தேர்தல்களில் தனியான கட்சியில் வெற்றிபெற்றிருந்தாலும்கூட சிறீ லங்கா சுதந்திரக் கட்சிதான் அவர்களின் தாய் கட்சியாகும்.

ஐக்கிய தேசியக் கட்சி அடிப்படையில் வலதுசாரி அரசியலைப் பிரிதிநிதித்துவப்படுத்தினாலும் முற்றிலும் மேற்கு சார்பான வெளிவிவகாரக் கொள்கையை கொண்டிருந்தாலும்கூட தேசிய இனப்பிரச்னையைக் கையாளுவதில் தாராளவாத அணுகுமுறையை கடைப்பிடித்திருக்கவில்லை. பண்டா - செல்வா உடன்பாடு, எவ்வாறு சிறீ லங்கா சுதந்திரக் கட்சியின் பண்டாரநாயக்கவால் துஷ்பிரயோகம் செய்யப்பட்டதோ, அதேபோன்றுதான் டட்லி - செல்வா உடன்பாடு ஐக்கிய தேசியக் கட்சியின் டட்லியால் துஷ்பிரயோகம் செய்யப்பட்டது. தங்களுக்குள் அதிகாரத்தில் கொள்கையில் மோதிக்கொண்டாலும்கூட தமிழ்த் தேசிய இனத்தின் அரசியல் அபிலாசைகளை துஷ்பிரயோகம் செய்ததில் இரண்டு பாரம்பரிய கட்சிகளுக்கும் இடையில் அடிப்படையான வேறுபாடுகளை காணமுடியாது.

ஒப்பீட்டு அடிப்படையில் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக் காலத்தில் தமிழ் மக்களுக்கு எதிராக உச்சமான துஷ்பிரயோகங்களும் அழித்தொழிப்புக்களும் இடம்பெற்றிருக்கின்றன. நன்கு படித்த தந்திரசாலியான மேற்குலக - குறிப்பாக அமெரிக்க சார்பானவரான ஜே. ஆர். ஜெயவர்த்தன அதிகாரத்தில் இருந்தபோதுதான், 1983இல் தமிழ் மக்களுக்கு எதிரான மிலேச்சத்தனமான அழித்தொழிப்புக்கள் அரங்கேறின. ஈழத் தமிழர்களின் அறிவின் அடையாளமாகப் போற்றப்பட்ட, யாழ்ப்பாண நூல் நிலையம் எரித்து சாம்பலாக்கப்பட்டது. இவைகள் அனைத்தும் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட அசிங்க நடத்தைகளாகும்.

ஆனாலும் இதிலுள்ள முரண்பாடான விடயம், இத்தனை மோசமான அனுபவங்களுக்குப் பின்னரும்கூட தமிழ்த் தேசிய தலைமைகள் ஜனாதிபதி தேர்தல்களின்போதும், பேச்சுகளின்போதும் ஐக்கிய தேசியக் கட்சியுடன்தான் இணைந்து பயணித்திருக்கின்றன. ஒவ்வொரு ஜனாதிபதி தேர்தல்களின்போதும் தமிழ் மக்கள் ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்டபாளர்களையே ஆதரித்திருக்கின்றனர். 2005 தேர்தல் மட்டும் சற்று விதிவிலக்கானது. ரணில் விக்கிரமசிங்கவை தோற்கடிக்கும் நோக்கில், விடுதலைப் புலிகள் அமைப்பு தேர்தலை பகிஷ்கரிக்குமாறு வலியுறுத்தியது.

இன்று மீளவும் 17 வருடங்களுக்கு பின்னர் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அன்று கைநழுவிப்போன இடத்தைப் பிடித்திருக்கின்றார். இந்த நிலையில் அவரின் ஐக்கிய தேசியக் கட்சியின் வரலாற்றுக்கு மாறாக அவர் என்ன செய்வார் - எதைச் செய்ய முயற்சிப்பார் என்பதில்தான் அவருக்கும் அவரின் ஐக்கிய தேசியக் கட்சி ஆசான்களுக்குமுள்ள வேறுபாடு நிரூபணமாகும்.

# மிச்சேல் பச்லெட்டின் அனுபவம் பேசுகின்றது!

**அலசுவது இராஜதந்திரி**



ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் மிச்சேல் பச்லெட் சர்வதேச சமூகத்திடம் இலங்கையில் அடிப்படை உரிமைகள் மீறல்கள் சம்பந்தமாகவும் எதிர்காலத்தில் இலங்கையில் மனித உரிமைகளை மேம்படுத்துவது சம்பந்தமாகவும் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளுக்கு உதவுமாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் தலைவர் என்ற அந்தஸ்தில் இருக்கும் ஒருவரே இவ்வாறு கோரிக்கை விடுக்குமளவுக்கு இலங்கையில் அடிப்படை மனித உரிமைகள் எவ்வளவு தூரம் மீறப்பட்டுள்ளன என்பதை சர்வதேச சமூகம் நன்கு ஊகிக்க முடியும்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 51ஆவது கூட்டத்தொடர் இன்னும் ஓரிரு தினங்களில் ஜெனிவாவில் ஆரம்பமாகவுள்ளது. அடிப்படை மனித உரிமைகள் என்பது அரசியல் காரணங்கள் காரணமாகவோ அல்லது இராணுவ நடவடிக்கைகள் காரணமாகவோ மட்டுமல்ல, பொருளாதார இடர்பாடுகள் காரணமாகவும் புறக்கணிக்கப்பட முடியும்.

இலங்கையில் அரசியல் மற்றும் இராணுவ நடவடிக்கைகள் காரணமாக அடிப்படை மனித உரிமைகள் பெரிதும் மீறப்பட்ட நிலையே நீண்ட நெடுங்காலமாக இருந்து வருகின்றது. இதன்காரணமாக வடக்கு - கிழக்கு மாகாணங்களே பெரிதும் பாதிக்கப்பட்டவையாக இருக்கின்றன. இருந்தபோதிலும் இலங்கையில் யுத்தம் முடிவுக்கு வந்த காலம் முதல் அடிப்படை மனித உரிமைகளை மீறியோரை இனங்கண்டு உரிய நடவடிக்கைகளை சர்வதேச சட்டங்களுக்கு அமைவாக மேற்கொள்ளும் போக்கு காணப்படவில்லை. அத்துடன், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கையில் அடிப்படை மனித உரிமைகளை மேம்படுத்துவது தொடர்பாக கொண்டுவரப்பட்ட தீர்மானங்களை நிறைவேற்றுவதிலும் இலங்கை போதியளவு அக்கறை காட்டாதுள்ளது. இதன்காரணமாகவே மிச்சேல் பச்லெட் அம்மையார் இலங்கை தொடர்பாக கொண்டுவரப்பட்ட தீர்மானங்களை நிறைவேற்ற சர்வதேச சமூகத்தின் உதவியை கோரியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் இலங்கை குறித்த தீர்மானங்கள் நிறை வேற்றப்படும் பட்சத்தில் இலங்கை சர்வ தேச சமூகத்தின் நம்பகத்தன்மைக்கு உள்ளாக முடியும். அத்துடன், இலங்கையில் இன ரீதியான நல்லெண்ணம் மேம்படுத்தப்படும் போது நீடித்து - நிலைத்த சமாதான சக வாழ்வை இலங்கையில் எதிர்பார்க்க முடியும் என்பதே சர்வதேச சமூகத்தின் எதிர்பார்ப்பாக இருக்கின்றது. இதுதவிர, இலங்கையில் பொருளாதார ரீதியான வளர்ச்சியையும் எதிர்பார்க்க முடியும் என்றே கருதப்பட்டுமிருந்தது.

இலங்கையில் உள்நாட்டு யுத்தம் முடிவுற்று பத்து ஆண்டுகளுக்கு மேலாகியுள்ள போதிலும் பொருளாதார ரீதியான மேம்பாட்டை காணமுடியாதுள்ளது. யுத்தம் இடம்பெற்ற காலப்பகுதியில்கூட எரிபொருளுக்காக மக்கள் வரிசையில் காத்திருக்கவில்லை. சமையல் எரிவாயுவுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கவில்லை. ஆனால், தற்சமயம் பொருட்கள் மற்றும் மின்சாரம், நீர் விநியோகம் போன்றவற்றுக்கான கட்டணங்களின் அதிகரிப்பு என்பவையும்கூட நாட்டு மக்களை மிக அதிகளவில் பாதிப்படையவைத்துள்ளது.

இதன்காரணமாகவே மிச்சேல் பச்லெட் இலங்கை விடயத்தில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை சார்பாக சர்வதேச சமூகத்திடம் இலங்கைமீது கொண்டுவரப்பட்ட தீர்மானங்களை நிறைவேற்ற உதவுமாறு கோரியுள்ளார்.

பொருளாதார ரீதியான நடவடிக்கைகள் ஒரு நாட்டில் மேம்படுவதற்கு அடிப்படை மனித உரிமைகளை முன்னேற்றகரமாகப் பேணுவதுகூட இன்றியமையாதாகின்றது. உலகில் பொருளாதார ரீதியாக துவண்டு போயுள்ள நாடுகளை எடுத்து நோக்கும் பட்சத்தில் அடிப்படையில் அவற்றின் அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்ட தன்மையே காணப்படுகின்றது. இருந்தபேதிலும் அவை தம்மை மீளவும் சீர்திருத்திக்கொண்ட நிலையில் அவற்றின் பொருளாதாரம் வியத்தகு விதத்தில் சிறப்புற்றுள்ளதையும் அவதானிக்க முடியும்.

இதற்கு நல்ல உதாரணமாக வியட்நாம், பங்களாதேஷ் போன்ற நாடுகளைக் குறிப்பிடலாம். எனவே இத்தடவை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 51ஆவது கூட்டத்தொடர் ஆரம்பமாகும்போது இலங்கைக்கு நெருக்கடியைத் தரக்கூடிய பல விடயங்கள் தலைகாட்ட முடியும். இதனை முன்கூட்டியே குறிப்பிடுவது போலவே ஓய்வு பெற்றுச்செல்லும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை ஆணையாளர் மிச்சேல் பச்லெட்டின் இலங்கை குறித்த கருத்துகளும் விளங்குகின்றன.

மிச்சேல் பச்லெட் முன்னர் நேரடியாகவே இலங்கை வந்து நிலவரங்களை பார்வையிட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. எனவே, இலங்கை குறித்த அவரின் கருத்துக்கண்ணோட்டம் என்பது அவரது அனுபவம் பேசுகின்றது என்றே கூறமுடியும்.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



ஈழநாடு






**மேடம்**
வியாபாரத்தை விருத்தி செய்ய நீங்கள் மேற் கொள்ளும் முயற்சி வெற்றியாகும். மேலதிகாரியுடன் ஏற்பட்ட பிரச்னைகளை சரி செய்வீர்கள். உங்கள் செல்வாக்கு உயரும்.

**இடபம்**
இரண்டு நாளாக இருந்த நெருக்கடி விலகும். உங் கள் முயற்சி எளிதாக நிறைவேறும். திட்டமிட்டு செயல்படுவீர்கள். நீங்கள் நினைத்ததை இன்று அடைவீர்கள்.

**மிதுனம்**
இரண்டு நாளாக இருந்த நெருக்கடி விலகும். உங் கள் முயற்சி எளிதாக நிறைவேறும். திட்டமிட்டு செயல்படுவீர்கள். நீங்கள் நினைத்ததை இன்று அடைவீர்கள்.

**கடகம்**
நண்பர்களின் ஆதரவுடன் நீண்ட நாள் பிரச்னைக்கு தீர்வு காண்பீர்கள். உறவுகளிடம் ஏற்பட்ட பிரச்னை கள் சரியாகும். நினைத்தவற்றில் ஆதாயம் காண் பீர்கள்.

**சிம்மம்**
துணிச்சலுடன் செயல்பட்டு முயற்சியில் வெற்றி காண்பீர்கள். பகைவர்கள் விலகிச் செல்வார்கள். உடல் நிலையில் இருந்த சங்கடங்கள் விலகும். உற்சாகத்துடன் செயல்படுவீர்கள்.

**கன்னி**
முயற்சியில் தடைகளை சந்தித்தாலும் போராடி வெல்வீர்கள். விலகிச்சென்ற உறவுகள் தேடி வருவார்கள். பூர்வீக சொத்தில் இருந்த பிரச்னை விலகும்.

**துலாம்**
நண்பர்களின் பேச்சால் ஆசை அதிகரிக்கும். செய லில் கவனம் தேவை. எதிர்பாலினரிடம் எச்சரிக்கை வேண்டும். உங்கள் செயல்களில் மட்டும் கவனம் செலுத்துங்கள்.

**விருட்சிகம்**
உங்கள் செல்வாக்கு உயரும். நண்பர்களின் ஆதர வுடன் நினைத்ததை சாதிப்பீர்கள். குடும்பத்தில் சுபச்செலவு அதிகரிக்கும். சிலர் நகை, வாகனம் என்று வாங்கி மகிழ்வீர்கள்.

**தனுசு**
எதிர்பார்த்த வரவு உண்டு. சிலர் புதிய சொத்து வாங்கி மகிழ்வீர்கள். குழப்பங்கள் விலகும். மற்ற வர்களுக்கு கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள் சிந்தித்து செயல்பட்டு சிரமங்களில் இருந்து விடு படுவீர்கள்

**மகரம்**
உங்களின் எதிர்பார்ப்புகள் தள்ளிப் போகும் என்ப தால் செயல்களில் குழப்பம் உண்டாகும். உறவி னர்களால் சில நெருக்கடிகளை சந்திப்பீர்கள். பேச்சில் கவனம் தேவை.

**கும்பம்**
அரசு வழியில் உங்களின் எதிர்பார்ப்பு நிறை வேறாமல் போகும். பொன் பொருட்களை விற்று புதிய முயற்சியை மேற்கொள்வீர்கள். செலவில் கவனம் தேவை.

**மீனம்**
புதிய தொழில் தொடங்கும் முயற்சி நிறைவேறும். மகிழ்ச்சி அதிகரிக்கும். உங்கள் செல்வாக்கு உயரும். திட்டமிட்டு செயல்பட்டு மேலதிகாரியிடம் பாராட்டு பெறுவீர்கள். எதிர்பார்த்தவற்றில் ஆதாயம் காண்பீர்கள்.

# வெறுப்பு அரசியலுக்கு எனது தந்தையை இழந்ததுபோல் நாட்டை இழக்கமாட்டேன்!

## ராகுல் காந்தி தெரிவிப்பு

ஸ்ரீபெரும்புதூர், செப். 08
"வெறுப்பு அரசியலுக்கு என் தந்தையை இழந்ததுபோல் என் தேசத்தை இழக்கமாட் டேன்" என்று ராகுல் காந்தி கூறியுள்ளார்.

இந்திய அளவில் காங்கிரஸ் கட்சியை பலப்படுத்தவும், தொண்டர்களை உற்சாகமடை யச் செய்யவும் 'பாரத் ஜோடோ யாத்ரா' என்ற இந் திய ஒற்றுமை நடைபயணத்தை நேற்று ராகுல் காந்தி தொடங்கினார்.

இதற்கு முன்னதாக, அவர் வெறுப்பு அரசியலுக்கு தனது தந்தையை இழந்ததுபோல் இந்த தேசத்தை இழக்க மாட் டேன் என்று டுவிற்றர் பதிவில் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தனது ட்விட்டர் பக்கத்தில், "வெறுப்பு அரசியலுக்கும், பிரி வினைவாதத்துக்கும் எனது தந் தையை இழந்தேன். ஆனால், அதேபோல் அதே சக்திகளுக்கு எனது தேசத்தை இழக்க மாட்டேன். வெறுப்பை நிச்சய மாக அன்பு வெல்லும். நம் பிக்கை அச்சத்தை தோற்கடிக் கும். இணைந்தே நாம் இதை வெல்வோம் " என்று பதிவிட் டுள்ளார்.

இதேநேரம், நேற்றுக் காலை தனது தந்தை ராஜீவ் காந்தியின் நினைவிடத்தில் அஞ்சலி செலுத்திய அவர் பின் னர் அங்கு தந்தையின் புகைப் படத்தின் முன் அமர்ந்து வீணை காயத்ரியின் இசை அஞ்சலி நிகழ்ச்சியில் கலந்து கொண் டார். (ஐ)



# கச்சதீவு ஒப்பந்தத்தை இரத்து செய்ய வேண்டும்!

## உயர்நீதிமன்றில் வழக்கு தாக்கல்

சென்னை, செப். 08
கச்சதீவு ஒப்பந்தத்தை இரத் துச் செய்யக் கோரி தாக்கல் செய்யப்பட்ட பொது நல மனுவை இந்திய உயர் நீதி மன்றம் ஏற்றுள்ளது.

கச்சதீவு ஒப்பந்தத்தை இரத் துச் செய்யக் கோரி மதுரையை சேர்ந்த கே. கே. ரமேஷ் என்ப வரால் பொதுநல வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த பொது நல வழக்கை உயர் நீதிமன்ற நீதியரசர் ஹேமந்த் குப்தா தலைமையி லான குழுவினர் விசாரணைக்கு எடுத்துக்கொண்டனர்.

இலங்கை கடற்படையின ரால் இந்திய மீனவர்கள் பாதிக் கப்படுகின்றனர் என்று மனுதா ரர் தரப்பு சட்டத்தரணி மன் றில் சுட்டிக்காட்டியுள் ளார்.

கச்சதீவு தொடர்பில் முன் னாள் முதல்வர் ஜெயலலிதா ஜெயராம் தாக்கல் செய்த மனு நிலுவையில் உள்ளதாக நீதியர சர் இதன் போது சுட்டிக் காட் டினார். எனினும், ஏற்கனவே நிலு வையில் உள்ள மனுக்களுடன் குறித்த மனுவையும் இணைத் துக்கொள்ளுமாறு நீதியரசர் உத்தரவிட்டுள் ளார். (ஐ)

# கச்சதீவு நிச்சயமாக தமிழகத்துடன் சேரும்!

## தமிழ்நாடு பா. ஜ. க. தலைவர்

நாகர்கோவில், செப். 08
கச்சதீவை மீட்போம் என்று சொன்ன முதல் கட்சி பா. ஜ. கதான். நிச்சயமாக கச்சதீவு தமி ழகத்துக்கு வரும் என்று பார திய ஜனதா கட்சியின் தமிழக தலைவர் அண்ணா மலை கூறினார்.

அத்துடன், கன்னியாகுமரி யில் தொடங்கிய நடைபய ணத்தை காஷ்மீரில் நிறைவு செய்யும்போது பிரதமர் மோடி யின் பக்தராக ராகுல்காந்தி மாறி விடுவார் என்றும் சொன்னார்.

"கடந்த 75 ஆண்டுகளில் பெரும்பாலான காலங்களில் அவர்களின் குடும்பத்தைச் சேர்ந்தவர்களே பிரதமர் பதவி வகித்துள்ளனர். இக்காலங்க ளில் இந்தியா என்னவெல்லாம் இழந்தது என்பதைப் பார்க்க வேண்டும். குறிப்பாக ஜம்மு, காஷ்மீரை பெயரளவுக்குதான் வைத்திருந்தோம். கச்சதீவை மீட்போம் என்று சொன்ன முதல் கட்சி பா. ஜ. கதான். நிச்சயமாக கச்சதீவு தமிழகத் துக்கு வரும்

கடந்த 8 ஆண்டுகளில் பிரதமராக நரேந்திர மோடி வந்த பின்னர் ஒரே நாடு, ஒரே மக்கள் என இந்தியா இணைந் திருக்கிறது. எப்போதும் இல் லாத ஒற்றுமை இந்தியாவில் நிலவுகிறது.

காங்கிரஸால் எந்த ஆட்சி மாற்றத்தையும் கொடுக்க முடியாது. தமிழகத்திலேயே தி. மு. க. தயவில்தான் உள்ள னர். இந்தியாவில் 70 ஆண்டு களில் காங்கிரஸ் பிரித்து வைத் திருந்தவற்றை, 8 ஆண்டுகளில் மோடி சீரமைத்துள்ளார். ராகுல்காந்தி தனது நடை பய ணத்தை காஷ்மீரில் முடிக் கும்போது மோடியின் பக்த ராக மாறிவிடுவார் - என்றார்.

# ஒன்லைன் சூதாட்டத்துக்கு அரசாங்கம் துணைபோகிறது

## எதிர்க்கட்சி தலைவர் குற்றச்சாட்டு

திருப்பூர், செப். 08
ஒன்லைன் சூதாட்டத்துக்கு துணைபோகும் ஆட்சியாக தி. மு. க. அரசாங்கம் உள்ளது என எதிர்க்கட்சி தலைவர் பழனிசாமி விமர்சித் துள்ளார்.

தி. மு. க. சார்பில் அளிக்கப் பட்ட பல்வேறு தேர்தல் வாக்குறுதிகள் தற்போதுவரை நிறைவேற் றப்படவில்லை. வாக்களித்த மக்களை தி. மு. க. ஏமாற்றிவிட்டது.

ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் ஒரு பேச்சு, வந்த பின்னர் ஒரு பேச்சு என தி. மு. க. உள்ளது. பல்லடம் புறவழிச் சாலை திட்டம் இன்னும் நிறைவேற்றப்படவில்லை.

பெற்றோல், டீசல் விலை குறைப்பு என எதையும் தி. மு. க. அரசு செய்யவில்லை. ஒன் லைன் ரம்மி சூதாட்டம் தொடர்பாக நாங்கள் சட்டமே நிறைவேற்றினோம். ஆனால், தற்போது சூதாட்டத்துக்கு துணைபோகும் ஆட்சியாக தி. மு. க. அரசு உள்ளது - என் றார். (ஐ)



# மாணவி கிருசாந்திக்கு நேற்று செம்மணியில் நினைவேந்தல்!

யாழ்ப்பாணம், செப். 08

**செம்மணியில் படுகொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்ட சுண்டுக்குளி மாணவி குமாரசாமி கிருசாந்தியின் 26ஆவது ஆண்டு நினைவேந்தல் நேற்று முன்னெக்கப்பட்டது. இதன்போது, அப்பகுதியில் கொல்லப்பட்டு புதைக்கப்பட்ட ஏனையவர்களுக்கும் அஞ்சலி செலுத்தப்பட்டது.**

தமிழ்த் தேசிய கட்சியின் ஏற்பாட்டில் நேற்று முற்பகல் 10 மணியளவில் இந்த நினைவேந்தல் முன்னெடுக்கப்பட்டது.

இந்த நினைவேந்தலில் முன்னாள் எம். பி., எம். கே. சிவாஜிலிங்கம், வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் பா. கஜதீபன், தமிழ்த் தேசியக் கட்சி உறுப்பினர்கள் உள்ளிட்டவர்கள் கலந்துகொண்டனர்.

1996ஆம் ஆண்டு செப்ரெம்பர் 7ஆம் திகதி சுண்டுக்குளி மாணவி கிருசாந்தி செம்மணி இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டு பாலியல் வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்டு கொல்லப்பட்டார். இதே போன்று, அவரை தேடிச் சென்ற தாயார், சகோதரன், அயலவர் என மூவரும் கொல்லப்பட்டு செம்மணியில் புதைக்கப்பட்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)





# வலைப்பாடு மீனவர்மீது தாக்குதல் நீதியான நடவடிக்கை எடுங்கள்!

*அமைச்சர் டக்ளஸ் கடற்படை அதிகாரிக்கு பணிப்பு*

கிளிநொச்சி, செப். 08

பூநகரி, வலைப்பாட்டில் கடற்றொழிலாளர்கள் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக, பொறுப்புக்கூறவல்ல கடற்படை அதிகாரியை நேற்று கடற்றொழில் அமைச்சுக்கு அழைத்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, சம்பவம் தொடர்பாக விசாரணை மேற்கொண்டு நீதியான நடவடிக்கை மேற்கொள்ளுமாறும், இவ்வாறான விரும்பத்தகாத விடயங்கள் எதிர்காலத்தில் நடைபெறாமல் இருப்பதை உறுதிப்படுத்துமாறும் தெரிவித்தார்.

மேலும், இந்திய கடற்றொழிலாளர்களின் செயல்பாடுகள் உட்பட இலங்கை கடற்பரப்பில் மேற்கொள்ளப்படுகின்ற அனைத்து சட்ட விரோத கடற்றொழில் செயல்பாடுகளையும் கட்டுப்படுத்துவதற்கு கடற்படையினரின் தொடர்ச்சியான நடவடிக்கையை முன்னெடுக்குமாறும் கூறியுள்ளார்.

இதன்போது, வலைப்பாடு விவகாரம் தொடர்பாக உள்ளக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த கடற்படை அதிகாரி, இரண்டு தரப்பிலும் தவறுகள் இருப்பதாக முதல்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளதாகவும் விரிவான விசாரணை மேற்கொள்ளப்பட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்தார்.

அத்துடன், சட்ட விரோத கடற்றொழில் செயல்பாடுகளை கட்டுப்படுத்துவதில் காணப்படும் நடைமுறை பிரச்னைகள் தொடர்பாகவும் கடற்படை அதிகாரியால் கடற்றொழில் அமைச்சருக்கு தெரியப்படுத்தப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் கடற்றொழில் அமைச்சின் செயலாளர், கடற்றொழில் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் உட்பட்ட அதிகாரிகளும் கலந்து கொண்டிருந்த நிலையில், சட்ட விரோத கடற்றொழில் செயல்பாடுகளை கட்டுப்படுத்துவதற்கு கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளுடன் ஒருங்கிணைந்த நடவடிக்கைகளை மேற்கொண்டு, நடைமுறை ரீதியாக எதிர்கொள்ளும் பிரச்னைகளை கையாளுமாறு கடற்றொழில் அமைச்சர் சம்பந்தப்பட்ட இரண்டு தரப்பினருக்கும் ஆலோசனை வழங்கினார். (ஐ)

# 156ஆவது பொலிஸ் தினம்; வவுனியாவில் சிரமதானம்!

வவுனியா, செப். 08

156ஆவது பொலிஸ் தினத்தை முன்னிட்டு நேற்று வவுனியாவில் சிரமதான பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

இதன்போது பொலிஸாரால் வவுனியா புகையிரத நிலையம் மற்றும் அதனை அண்டிய வீதிகளில் சிரமதானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.



இந்த சிரமதானப் பணியில் வவுனியா பொலிஸாருடன் சுகாதார பரிசோதகர், புகையிரத நிலைய ஊழியர்கள், நகர சபையினரும் இணைந்து ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.(ஐ)

# அரசியல் கைதிகள் உண்ணாவிரதம்; விடுதலைக்காக மீண்டும் போராட்டம்!

*அருட்தந்தை சக்திவேல்*

யாழ்ப்பாணம், செப். 08

"அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பான எதிர்பார்ப்பு இன்று வரை நிறைவேற்றப்படவில்லை. இந்நிலையில், மீண்டும் தமது விடுதலைக்கான போராட்டத்தை ஆரம்பிக்கும் வாய்ப்பே உள்ளது" - என்று அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்காக போராடும் தேசிய அமைப்பின் இணைப்பாளர் அருட்தந்தை மா. சக்திவேல் தெரிவித்துள்ளார்.

இது குறித்து நேற்று அவர் வெளியிட்ட அறிக்கையில்,

"விடுதலைப் புலிகளின் மீளுருவாக்கம் என்று பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு வெலிக்கடை மற்றும் மகசின் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் இளைஞர்கள் தாம் கைது செய்யப்பட்ட நாட்களில் இருந்து இன்று வரை நீதிமன்றத்துக்கு அழைக்காதிருக்கின்றமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், நியாயம் கோரியும் உணவு தவிர்ப்பு போராட்டத்தை ஆரம்பித்திருக்கின்றனர்.

இந்த விடயத்தில் அரசும், நீதி அமைச்சும் கவனம் செலுத்தி இவர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதோடு நியாயத்தை நிலைநாட்டுமாறு அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பு அவசர வேண்டுகோளை விடுகின்றது.

சர்வதேசத்தை நம்ப வைப்பதற்காகவும், பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் கைது செய்யப்பட்ட அரசியல் கைதிகளை விடுவிக்கின்றோம் என்று வெளி உலகத்துக்குக் காட்டவும் கடந்த இரண்டு, மூன்று வருடங்களில் புலி உருவாக்கும் எனக் கைது செய்யப்பட்டவர்களில் ஒருசிலரை ஆட்சியாளர்கள் பிணையில் விடுவித்தனர்.

இந்நிலையில், இவர்கள் தமக்கு நியாயம் வேண்டியும், ஒட்டுமொத்த அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தியும் உணவு தவிர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்திருப்பது குடும்பத்தாரை கவலையில் ஆழ்த்தியுள்ளது. அவர்களை உணவு தவிப்புப் போராட்டத்தில் இருந்து மீட்குமாறும், உடல் நிலையைக் கவனத்தில் கொண்டு விடுதலையை வலியுறுத்துமாறும் கேட்கின்றனர்.

அரசியல்வாதிகளின் வாக்குறுதிகளை நம்பி அத்தகைய போராட்டங்கள் கைவிடப்பட்டாலும் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பான எதிர்பார்ப்பு இன்றுவரை நிலைநாட்டப்படவில்லை. இந்நிலையில், அவர்களும் மீண்டும் தமது விடுதலைக்கான போராட்டத்தை ஆரம்பிக்கும் வாய்ப்பே உள்ளது.

ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டத்தொடர் ஆரம்பமாகவிருக்கும் காலகட்டத்தில் மிக அண்மையில் கைது செய்யப்பட்டவர்களில் ஒரு சிலரை பிணையில் அனுப்பிவிட்டு அரசியல் கைதிகளை விடுதலை செய்வதாக அரசு நாடகமாடும் வாய்ப்பு உள்ளது.

இந்நிலையில் தமிழ் அரசியல் தலைமைத்துவங்கள் இதனைக் கருத்தில்கொண்டு உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளோரின் நியாயமான கோரிக்கையை நிறைவேற்ற அரசுக்கு அழுத்தம் கொடுப்பதோடு ஒட்டுமொத்த அரசியல் கைதிகளும் விடுதலையாவதற்கு கூட்டுச் செயல்பாட்டை முதன்மைப்படுத்துமாறு அரசியல் கைதிகளின் பெற்றோரோடு அரசியல் கைதிகளின் தேசிய அமைப்பும் கேட்டு கொள்கின்றது" - என்றுள்ளது.

# பண்ணை கடற்கரையில் நேற்று சிரதமதான பணி!

யாழ்ப்பாணம், செப். 08

உலக சேவைகள் தினத்தை முன்னிட்டு லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் மாநகர சபையின் ஒத்துழைப்புடன் யாழ்ப்பாணம் பண்ணை கடற்கரை பகுதி நேற்று துப்புரவு செய்யப்பட்டது.

பொலிஸ் திணைக்களத்தின் 156ஆவதுஆண்டு நிறைவை முன்னிட்டு பொலிஸ் வாரம் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், உலக சேவைகள் தினத்தை முன்னிட்டு நேற்று லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாண பொலிஸார் மற்றும் யாழ். மாநகர சபையுடன் இணைந்து இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் பணியில் யாழ்ப்பாண பொலிஸ்நிலைய பொலிஸ் உத்தியோகத்தர்கள் லயன்ஸ் கழகத்தின் உறுப்பினர்கள் மற்றும் யாழ்ப்பாண மாநகர சபை பிரதிமுதல்வர் மற்றும் யாழ். மாநகர சபை பணியாளர்கள் கலந்து கொண்டனர். (ஐ-3)



# 60 இலட்சத்துக்கும் மேற்பட்டோர் உணவு பாதுகாப்பற்ற நிலையில்!

## உலக உணவு திட்டம் தெரிவிப்பு

ஜெனிவா, செப். 08

**இலங்கையில் பொருளாதார நெருக்கடிகள் காரணமாக 60 இலட்சத்துக்கும் அதிக மக்கள் உணவு பாதுகாப்பற்ற நிலையில் உள்ளனர். இலங்கை மக்களின் வாழ்க்கை செலவு அதிகரிப்பானது ஆரோக்கியமான மற்றும் போதுமான உணவின் அணுகலைக் கட்டுப்படுத்துகிறது என்று உலக உணவு திட்டம் தெரிவித்துள்ளது.**

இலங்கையின் உணவு பாதுகாப்பற்ற நிலைமை தொடர்பில் உலக உணவு திட்டம் வெளியிட்டுள்ள புதுபிக்கப்பட்ட மதிப்பீட்டு அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இலங்கை சுதந்திரம் பெற்றதன் பின்னர் மிக மோசமான பொருளாதார நெருக்கடியை அனுபவித்து வருகிறது. இது பல வருட வளர்ச்சி முன்னேற்றத்தை அச்சுறுத்தும் வகையில் அமைந்துள்ளது.

இந்நிலைமையானது ஐக்கிய நாடுகள் சபையின் 2030 நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கான நாட்டின் திறனை கடுமையாக குறை மதிப்புக்கு உட்படுத்துகிறது.

60 இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் அதாவது சுமார் 30 சதவீத மக்கள் - தற்போது உணவுப் பாதுகாப்பற்ற நிலையில் உள்ளனர் மற்றும் அவர்களுக்கு மனிதாபிமான உதவி தேவைப்படுகிறது.

குறைவடைந்துள்ள உள்நாட்டு விவசாய உற்பத்தி, அந்நியச் செலாவணி இருப்பு பற்றாக்குறை மற்றும் ரூபாயின் பெறுமதியில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சி ஆகியவை உணவுப் பற்றாக்குறை மற்றும் வாழ்க்கைச் செலவில் அதிகரிப்பை ஏற்படுத்தியுள்ளன. இது மக்களின் ஆரோக்கியமான மற்றும் அதிக உணவுக்கான அணுகலைக் கட்டுப்படுத்துகிறது.

பொருளாதார நெருக்கடியானது குடும்பங்களை பசி மற்றும் வறுமையில் தள்ளியுள்ளது. சிலர் முதன்முறையாக வறுமைக் கோட்டுக்குக் கீழ் உள்ளடங்கியுள்ளனர். உலக வங்கியின் மதிப்பீடுகளுக்கமைய இது சுமார் 50 இலட்சம் மக்களைக் உள்ளடக்கியதாகக் காணப்படுகிறது.

உலக சுகாதார ஸ்தாபனத்தின் சமீபத்திய மதிப்பீட்டின் படி, 86 சதவீத குடும்பங்கள் மலிவான, குறைவான சத்துள்ள உணவை வாங்குகின்றனர், குறைவாக சாப்பிடுகின்றனர். சில சமயங்களில் உணவை முற்றிலுமாக தவிர்த்து வருகின்றனர். பொருளாதார நெருக்கடி மற்றும் தொற்றுநோய்க்கு முன்னர், இலங்கை முழுவதும் ஊட்டச்சத்து குறைபாடு விகிதம் ஏற்கனவே அதிகமாக இருந்தது.

கோவிட்-19 தொற்றுநோய்க்கு முன்னர், மற்ற நடுத்தர வருமான நாடுகளை விட இலங்கைப் பெண்களும் குழந்தைகளும் ஊட்டச்சத்து குறைபாட்டால் மிகவும் அதிகமாக பாதிக்கப்பட்டுள்ளனர். 5 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளில் 17 சதவீதமானோர் வளர்ச்சி குன்றியதால் மிகவும் குட்டையாக இருந்தனர் மற்றும் 15 சதவீதமானோர் மிகவும் உடல் மெலிவாகக் காணப்பட்டனர். தற்போதைய பொருளாதார நெருக்கடி இதை மேலும் மோசமாக்கும்.

கூடுதலாக, வறட்சி, வெள்ளம் மற்றும் நிலச்சரிவு போன்ற காலநிலை மாற்றங்கள் உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பின்மையை அதிகரிக்கின்றன.

உலக உணவுத் திட்டம் 1968 ஆம் ஆண்டு முதல் இலங்கை அரசாங்கத்துடன் இணைந்து ஊட்டச் சத்து குறைபாட்டை நிவர்த்தி செய்வதற்கும், குடும்பங்களுக்கு உணவு கிடைப்பதற்கு ஆதரவளிப்பதற்கும், சிறு விவசாயிகளின் உற்பத்தித்திறன் மற்றும் வருமானத்தை மேம்படுத்துவதற்கும் செயல்பட்டு வருகிறது.

இந்த ஆண்டு ஜூன் மற்றும் டிசெம்பருக்கு இடைப்பட்ட காலகட்டத்தில் உணவுப் பாதுகாப்பு, ஊட்டச்சத்து மற்றும் வாழ்வாதாரங்கள் ஆபத்தில் உள்ள 34 இலட்சம் மக்களுக்கு ஆதரவளிக்க உலக உணவு திட்டம் அதன் செயல்பாடுகளை விரிவுபடுத்துகிறது என்று கூறியுள்ளது.

(ஐ)



# யாழ். மாநகர சபைக்கு வழங்கவுள்ள தீயணைப்பு வாகன அறிமுக நிகழ்வு

யாழ்ப்பாணம், செப். 08

யாழ்ப்பாண வணிகர் கழகத்தால் யாழ். மாநகர சபைக்கு இரண்டு கோடி ரூபாய் பெறுமதியான தீயணைப்பு வாகனம் அன்பளிப்பாக வழங்கப்படவுள்ளது. இந்நிலையில், நேற்று புதி தாக கொள்வனவு செய்யப்பட்ட தீயணைப்பு வாகனத்துக்கான அறிமுக நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் யாழ்ப்பாண மாநகர சபையின் பிரதி முதல்வர், யாழ். மாநகர சபை உறுப்பினர்கள் மற்றும் வர்த்தக பிரதிநிதிகள் தீயணைப்பு படைபிரிவு உத்தியோர்கள் கலந்து கொண்டனர்.

கடந்த 2020ஆம் ஆண்டு யாழ். மாநகர சபைக்கு சொந்தமான தீயணைப்பு வாகனம் விபத்தில் முற்றாக சேதம் அடைந்தது. இந்நிலையிலேயே, யாழ். வணிகர் கழகம் எடுத்த முயற்சிகளின் அடிப்படையில் 2 கோடி ரூபாய் பெறுமதியான தீயணைப்பு வாகனம் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

இந்த வாகனம் அடுத்த வாரம் யாழ். மாநகர சபையிடம் கையளிக்கப்பட வுள்ளது. (ஐ)

# சர்வதேச விசாரணையே எங்களுக்கு வேண்டும்!

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள்

மன்னார், செப். 08

தற்போதைய ஜனாதிபதி நல்லாட்சி அரசாங்கத்தில் இருந்தார். அப்போது காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் நல்லதொரு முடிவை தருவதாகக் கூறியிருந்தார். ஆனால், ஒன்றும் நடக்கவில்லை. தற்போது அவர் ஜனாதிபதியாக கண்ணை மூடிக்கொண்டு இருக்கிறார்.

இவ்வாறான சூழ்நிலையில் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு தாய்மார்களும் உறவுகளும் சர்வதேச விசாரணை மட்டுமே எமக்கு வேண்டும் என்ற கோரிக்கையில் உள்ளனர் என மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடும் குடும்பங்களின் சங்க தலைவி மனுவல் உதயச்சந்திரா தெரிவித்தார்.

மன்னாரில் நேற்று புதன்கிழமை நடந்த செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் கூறினார். மேலும்,

காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகள் தொடர்பாக சர்வதேச விசாரணையே எமக்கு வேண்டும் என நாங்கள் கடந்த 13 வருடங்களுக்கு மேலாக சர்வதேசத்திடம் கோரி வருகிறோம்.

இலங்கை அரசில் எவ்வித நம்பிக்கையும் எமக்கு இல்லாத நிலையில் காணாமல், ஆக்கப்பட்ட உறவுகளுக்கு சர்வதேச விசாரணையே தேவை என்ற கோரிக்கையை நாங்கள் முன்வைத்தோம்.

ஆனால் 13 வருடங்களாகியும் எமது கோரிக்கை நிறைவேறவில்லை. எமது கோரிக்கை நிறைவேறும் நிலையில், இலங்கையில் இருந்து ஜெனிவா செல்கின்ற அமைச்சர்களும், அரசாங்கம் சார்பாக செல்கின்றவர்களும் சர்வதேச விசாரணை தேவையில்லை. உள்நாட்டு விசாரணை வேண்டும் என்று கூறுகின்றனர்.

எதிர்வரும் 51ஆவது ஜெனிவா கூட்டத்தொடரில் இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் உள்ளிட்ட குழுவினர் கலந்து கொள்ள உள்ளனர்.

இந்தக் கூட்டத்தொடரில் கலந்து கொள்ளவுள்ள இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் இலங்கையின் உள்நாட்டு விசாரணை போதும் என வலியுறுத்த உள்ளார். எனினும், உள்நாட்டு விசாரணையில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளாகிய எங்களுக்கு நம்பிக்கை இல்லை.

ஜெனிவா கூட்டத்தொடரின் போது இலங்கையில் காணாமல் ஆக்கப்பட்டோர் விடயம் தொடர்பில் தீர்க்கமான முடிவு எடுக்கப்பட வேண்டும். காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்காக நாங்கள் சுமார் 2 ஆயிரம் நாட்களுக்கு மேல் வீதியில் நின்று போராடி வருகிறோம். நீதிக்காகவே நாங்கள் போராடி வருகிறோம். நிதிக்காக போராடவில்லை.

எமது உறவுகள் குறித்து உண்மையும், நீதியும் எமக்கு தேவை. தற்போதைய வெளிவிவகார அமைச்சராக உள்ள அலி சப்ரி, நீதி அமைச்சராக இருந்த காலத்தில் ஒவ்வொரு மாவட்டமாக சென்று நிதிக்காக எங்களுடன் கலந்துரையாடினார். அவர் நீதிக்காக ஒருபோதும் எங்களுடன் கலந்துரையாடவில்லை.

இலங்கையில் உள்நாட்டு விசாரணை போதும் என்று கூற அவருக்கு எவ்வித அருகதையும் இல்லை. பாதிக்கப்பட்டவர்கள் நாங்கள். நாங்கள்தான் நிற்கின்றோம் எங்களுக்கு சர்வதேச விசாரணை மடடுமே வேண்டும் - என்றார்.

(ஐ)

# கொழும்பில் 50 ஆயிரம் பேர் போதை பாவனைக்கு அடிமை!

## அத்துரலிய தேரர் தெரிவிப்பு

கொழும்பு, செப். 08

கொழும்பு மாவட்டத்தில் மாத்திரம் சுமார் 50 ஆயிரத்துக்கும் அதிகமானோர் பாரதூரமான முறையில் போதைப் பொருள் பாவனைக்கு அடிமையாகியுள்ளனர். மாளிகாவத்தை, கொலனாவை மற்றும் வனாத்த முல்லை பகுதிகளில் போதைப் பொருள் பாவனை பாரதூரமான முறையில் அதிகரித்துள்ளன.

போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர்களுக்கு புனர்வாழ்வளிக்க விசேட சட்டம் இயற்றப்பட வேண்டும் என எதிர்தரப்பின் சுயாதீன பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் தெரிவித்தார்.

நேற்று புதன்கிழமை இடம்பெற்ற பாராளுமன்ற அமர்வின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் நகர் மற்றும் கிராமபுறங்களில் போதைப்பொருள் பாவனை தீவிரமாக அதிகரித்துள்ளன. விசேடமாக கொழும்பு மாவட்டத்தில் போதைப்பொருள் பாவனை பாரதூரமாக அதிகரித்துள்ளன. ஹெரோயின் போதைப் பொருள் பாவனையை காட்டிலும் தற்போது ஐஸ் போதைப் பொருள் பாவனை சமூக மட்டத்தில் தீவிரமடைந்துள்ளது.

பாடசாலை மாணவர்கள் மத்தியில் ஐஸ் போதை பொருள் பாவனை சடுதியாக அதிகரித்துள்ளமை பாரதூரமானது. ஐஸ் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர்கள் குறுகிய காலத்தில் சுகாதார ரீதியாக பாதிக்கப்படுவார்கள்.

போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர்கள் சமூக பாதுகாப்புக்கும்,சாதரண மக்களின் அன்றாட வாழ்வுகும் அச்சமூட்டும் நிலையில் உள்ளார்கள். கொழும்பு மாவட்டத்தில் மாளிகாவத்தை, கொலன்னாவ மற்றும் வனாத்த முல்ல ஆகிய பகுதிகளில் போதைப்பொருள் பாவனை தீவிரமாக அதிகரிக்கப்பட்டுள்ளன.

கொழும்பு மாவட்டத்தில் மாத்திரம் 50,000 அதிகமானோர் போதைப்பொருள் பாவனைக்கு பாரதூரமான முறையில் அடிமையாகியுள்ளார்கள்.

போதைப்பொருள் பாவனையை தேசிய பிரச்னையாக கருத்தில் கொண்டு போதைப் பொருள் பாவனை ஒழிப்புக்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார்.

(ஐ)

# 300 எரிபொருள் நிலையங்கள் மூடப்படுகின்றன என்பது பொய்!

## பெற்றோலிய கூட்டுத்தாபனம்

கொழும்பு, செப். 08

எரிபொருள் இன்மையால் 300 எரிபொருள் நிரப்பும் நிலையங்களை மூட வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளதாக கூறப்படுவது உண்மைக்கு புறம்பானது என்று இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

இது குறித்து பெற்றோலிய கூட்டுத்தாபனம் விடுத்த அறிக்கையில்,

எரிபொருள் இன்மையால் நாளாந்தம் சுமார் 300 எரிபொருள் நிரப்பும் நிலையங்களை மூட வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளன என்று வெளியான செய்திகள் உண்மைக்கு புறம்பானவையாகும்.

எரிபொருள் நிரப்பும் நிலையங்களுக்கு எரிபொருளை விநியோகிப்பதற்காக வழமையை விட அதிக பவுசர்களை சேவையில் ஈடுபடுத்துவதற்கு தனியார் பவுசர் உரிமையாளர்கள் சங்கம் மற்றும் பெற்றோலிய கூட்டுத்தாபனம் என்பன இணைந்து நடவடிக்கை எடுத்துள்ளன.

கொலன்னாவை மற்றும் முத்துராஜவலை முனையங்களும், சப்புகஸ்கந்தை எண்ணெய் சுத்திகரிப்பு நிலையமும் தொடர்ந்தும் இயங்கி வருகின்றன.

சில ஊடகங்களில் வெளியாகியுள்ள செய்திகளைப் போன்று எந்தவொரு எரிபொருள் நிரப்பும் நிலையத்தையும் மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

முறையற்ற வகையில் எரிபொருள் விநியோகத்தை தவிர்ப்பதற்காகவே மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சின் ஆலோசனையுடன் மட்டுப்படுத்தப்பட்டளவில் எரிபொருள் விநியோகிக்கப்படுகிறது.

தற்போது நாளாந்தம் இரு முனையங்களிலிருந்தும் சுமார் 4000 மெற்றிக் தொன் டீசலும், 3000 மெற்றிக் தொன் பெற்றோலும் விநியோகிக்கப்படுகிறது.

இது எரிபொருள் தட்டுப்பாடு நிலவிய காலத்தில் விநியோகிக்கப்பட்டதைவிட அதிகமாகும். எனவே, எரிபொருள் நிரப்பும் நிலையங்கள் மூடப்படுவதாக வெளியாகியுள்ள செய்திகள் உண்மைக்கு புறம்பானவை என்பதை மீண்டும் தெரிவித்துக் கொள்கின்றோம் - என்றுள்ளது. (ஐ)

## லேடி ரிட்ஜ்வே மருத்துவமனையில்

# சிறுவர்கள் போசாக்கு இன்மையால் பாதிப்பு

கொழும்பு, செப். 08

**கடந்த இரண்டு மாதங்களில் கொழும்பு லேடி ரிட்ஜ்வே சிறுவர் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்ட சிறுவர்களில் பெரும்பாலானோர் போசாக்கு இன்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அண்மையில் நடத்தப்பட்ட கணக்கெடுப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

சிறுவர்களுக்கு சத்தான உணவு கிடைப்பதில்லை என்பதும் கணக்கெடுப்பில் தெரிய வந்துள்ளது. இந்த சிறுவர்களில் பெரும்பான்மையானவர்கள் ஊட்டச்சத்து குறைபாடுகளால் பாதிக்கப்படுகின்றனர் என்பதும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட சிறுவர்களில் சுமார் 100 பேர் நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். மேலும் 900 சிறுவர்கள் புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ளனர் மருத்துவமனையின் சிறுவர் சிகிச்சை நிபுணர் வைத்தியர் தீபால் பெரேரா தெரிவித்தார்.

மேலும், கடந்த இரண்டு, மூன்று ஆண்டுகளாக பாடசாலைகள் மூடப்பட்டமையால் சரியான சத்தான உணவு கிடைக்காததுடன், சிறுவர்களின் மனநிலையும் வீழ்ச்சியடைந்துள்ளது.

மேலும், சிறுவர்களுக்கு சிற்றுண்டி, இனிப்பு பானங்கள் வழங்காமல் சத்தான உணவுகளை வழங்க பெற்றோர்கள் முழு முயற்சி எடுக்க வேண்டும். சிறார்களை இந்த போசாக்கு இன்மை நிலையிலிருந்து காப்பாற்றாவிட்டால் எதிர்காலத்தில் அவர்களின் மூளை வளர்ச்சி குறைந்து அவர்களின் புத்திசாலித்தனம் குறையும் அபாயம் உள்ளது - என்றும் கூறினார். (ஐ)

# சீரற்ற காலநிலையால் 10 ஆயிரம் பேர் பாதிப்பு!

கொழும்பு, செப். 08

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக 9 மாவட்டங்களை சேர்ந்த 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

2,729 குடும்பங்களை சேர்ந்த 10,885 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

கேகாலை, இரத்தினபுரி, குருநாகல், புத்தளம், கம்பஹா, கொழும்பு, களுத்துறை, கண்டி, மாத்தளை மற்றும் நுவரெலியா மாவட்டங்களைச் சேர்ந்தவர்களே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், ஒருவர் உயிரிழந்ததுடன், நேற்று காலை 2 பேர் காயமடைந்துள்ளனர்.

69 குடும்பங்களைச் சேர்ந்த 237 பேர் 09 தற்காலிக பாதுகாப்பு முகாம்களுக்கு மாற்றப்பட்டுள்ளனர் என்று அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் மேலும் தெரிவித்துள்ளது. (ஐ)

# விபத்தில் இளைஞர் பலி!

கொழும்பு, செப். 08

கார் மற்றும் மோட்டார் சைக்கிள் மோதி இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்.

கொழும்பு - கறுவாதோட்டம் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த மோட்டார் சைக்கிள் செலுத்திய நபர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார். இவ்வாறு உயிரிழந்தவர் 24 வயதுடைய கிராண்ட்பாஸை சேர்ந்தவராவார்.

கார் சாரதியின் கவனயீனம் விபத்துக்கு காரணம் என்றும் அவர் மதுபோதையில் இருந்தார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். சம்பவம் தொடர்பில் கார் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். (ஐ)

# வெளிநாட்டு வேலை வாய்ப்பு ஆர்வம் இலங்கையில் உயர்வு!

கொழும்பு, செப். 08

இலங்கையர்களிடம் வெளிநாட்டு வேலை வாய்ப்புகளுக்கான ஆர்வம் அதிகரித்து வருவதாக வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் தெரிவித் துள்ளது.

வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 2 இலட்சத்து 8 ஆயிரத்து 772 பேர் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் பதிவு செய்து நாட்டிலிருந்து சென்றுள்ளனர் என்று பணியகத்தின் ஊடகப் பேச்சாளர் காமினி செனரத் யாப்பா தெரிவித்துள்ளார்.

வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் தென் கொரியாவுக்கு 2 ஆயிரத்து 885 பேர் சென்றுள்ளனர் என்று அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# வெடிபொருட்களுடன் ஒருவர் நேற்று கைது!

பதுளை, செப். 08

வெடி பொருட்களுடன் நபர் ஒருவர் நேற்று புதன்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பதுளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கெந்தகொல்லை பகுதியில் சட்ட விரோதமான முறையில் வெடிபொருட்களை மறைத்து வைக்கப்பட்டிருப்பதாக பதுளை விசேட பொலிஸ் பிரிவுக்கு இரகசிய தகவல் கிடைத்துள்ளது. இதனையடுத்து, பதுளை குற்றத்தடுப்பு பொலிஸாரும், பதுளை விசேட பொலிஸ் பிரிவினரும் குறித்த வீட்டை சுற்றி வளைத்தனர்.

இதன்போது மிகவும் சூட்சுமமான முறையில், மறைத்து வைக்கப்பட்டு இருந்த டெட்டனேட்டர் 5, ஜெலட்டின் குச்சிகள் 3, 6 மீற்றர் வயரும், அமோனியம் 2 கிலோ 630 கிராமும், வெடிமருந்து 967 கிராமும், கஞ்சா போதைப் பொருள் 10 கிராமும் சந்தேக நபரிடமிருந்து கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேக நபர் 29 வயதுடைய அதே இடத்தைச் சேர்ந்தவர் என்பதோடு, விசாரணைகளின் பின்னர் சந்தேக நபரை பதுளை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ)

# ஐஸ் போதை வைத்திருப்போருக்கு இனி பிணை வழங்கப்பட மாட்டாது

## பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சு

கொழும்பு, செப். 08

ஐஸ் போதைப்பொருள் தொடர்பில் நாட்டில் அமுலிலுள்ள சட்டத்தை கடுமையாக்குவதற்கு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன்படி, 5 கிராமுக்கு மேல் ஐஸ் போதைப் பொருளை வைத்திருப்பவர்கள், விற்பனை செய்பவர்களுக்கு இனி பிணை வழங்கப்பட மாட்டாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்காக ஆபத்தான போதைப் பொருள் தடுப்புச் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ளப்படும் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலர் எஸ். ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

தற்போது ஐஸ் போதைப் பொருளை கைவசம் வைத்திருப்போர் மற்றும் விற்பனை செய்வோர் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட பின்னர் பிணையில் விடுவிக்கப்படுகின்றனர்.

இந்நிலையில், புதிய தடுப்புச் சட்டத்திற்கு அமைய 5 கிராம் அல்லது அதைவிட அதிக தொகை ஐஸ் போதைப் பொருளை கைவசம் வைத்திருப்போர் மற்றும் விற்பனை செய்வோருக்கு பிணை வழங்கப்பட மாட்டாது.

இது தொடர்பில் சந்தேக நபர்கள் குற்றவாளிகளாக இனங்காணப்படும் பட்சத்தில் அவர்களுக்கு ஆயுள் தண்டனை அல்லது மரண தண்டனை விதிக்கப்படவுள்ளதாகவும் அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

ஐஸ் போதைப்பொருள் பாவனை, நாட்டில் வேகமாக பரவி வருகிறது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதேசமயம், ஐஸ் போதைப் பொருளின் பாதிப்பு 225 வீதமாக அதிகரித்துள்ளது என்று தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபையின் தலைவர் பிரியங்கிகா அமரபந்து தெரிவித்துள்ளார். அத்துடன், ஐஸ் போதைப் பொருளுக்கு அடிமையானவர்களின் புனர்வாழ்வுக்காக விசேட வேலைத் திட்டத்தை முன்னெடுக்கவும் அரசாங்கம் திட்ட மிட்டுள்ளது என்றும் அவர் கூறினார். (ஐ)

# அத்தியாவசிய மருந்துகள் அவசரகதியில் கொள்முதல்!

கொழும்பு, செப். 08

தற்போது தட்டுப்பாடு நிலவும் 50 அத்தியாவசிய மருந்துகள் மற்றும் உபகரணங்களை அவசர கொள்முதல் முறையின் மூலம் கொள்வனவு செய்வதற்கு சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதில், கதிரியக்க (எக்ஸ்-ரே) அட்டைகளும் உள்ளடங்கியுள்ளன என்று சுகாதார அமைச்சின் செயலாளர் ஜனக சிறீ சந்திரகுப்த தெரிவித்துள்ளார்.

அவசர கால கொள்வனவு முறைமையின் ஊடாக இந்த மருந்துகளை கொள்வனவு செய்வதற்கு தேவையான பூர்வாங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

அரச மருத்துவமனைகளில் தற்போது பற்றாக்குறையாகக் காணப்படும் அத்தியாவசிய மருந்துகளின் எண்ணிக்கை 110ஐ தாண்டியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# சர்வதேச நாணய நிதியத்தின் கடனுதவி

## பொருளாதார நெருக்கடி தீர்வின் ஒரு பகுதி மாத்திரமே

இலங்கைக்கு 48 மாத காலத்துக்கு 290 கோடி அமெரிக்க டொலர்கள் கடனுதவியை வழங்குவது தொடர்பில் சர்வதேச நாணய நிதியத்துக்கும் அரசாங்கத்துக்கும் இடையில் காணப்பட்ட உடன்பாடு குறித்து பாரிஸ் கழகம் (Paris Club) அதன் திருப்தியை வெளிப்படுத்தியிருக்கிறது. சென்மதி நிலுவை (Balance of Payments ) அல்லது பண தொடர் இயக்கப் (Cash flow) பிரச்சினைகளை கொண்ட நாடுகளுக்கு உதவுவதற்கு பயன்படுத்தப்படுகின்ற விரிவாக்கப்பட்ட நிதி வசதியின் (நுஒவநனெநன குரனெ குயஉடைவைல) கீழ் இந்த கடனுதவி வழங்கப்படும்.

குறைவான அபிவிருத்தி கொண்ட நாடுகளுக்கு கடன்களை வழங்கியிருக்கின்ற தனவந்த நாடுகளின் முறைசாரா குழுவே பாரிஸ் கழகம் என்று அழைக்கப்படுகிறது. கடன்களை மீளச்செலுத்துவதில் நெருக்கடிகளை எதிர்நோக்குகின்ற நாடுகளுக்கான தீர்வுகளை காண்பதில் பாரிஸ் கழகம் நாட்டம் காட்டுகிறது. கடன்பட்ட நாடுகள் அவற்றின் கடப்பாடுகளை மதித்து நடப்பதை உறுதிசெய்வதற்கு இந்த பாரிஸ் கழகத்தின் நாடுகள் எந்தளவு கால அவகாசத்தை, எத்தகைய ஆலோசனையை, எந்தளவு கூடுதல் கடன்களை கொடுக்கின்றன என்பதைப் பொறுத்து அவற்றின் புரிந்துணர்வுடனான தன்னலத்தை தெரிந்து கொள்ளமுடியும்.

அதே போன்றே இலங்கையும் அதன் கடன்களை மீளச்செலுத்துவதை உறுதிசெய்வதில் பாரிஸ் கழகம் நாட்டம் காட்டுகின்ற நிலையில், மக்களை வறுமைப்படுத்தாமல் புதிய கடன்களை தன்னால் மீளச்செலுத்த முடியும் என்று அரசாங்கம் உறுதிப்படுத்தவேண்டியது முக்கியமானதாகும். கடந்த 6 மாதங்களில் பெரும்பான்மையான இலங்கையர்களின் வாழ்க்கைத்தரங்கள் மிகவும் மோசமாக வீழ்ச்சி கண்டுவந்திருக்கிறது.

தற்போது பாணின் விலை 300 ரூபாவாக அதிகரித்திருக்கிறது. இது 6 மாதங்களுக்கு முன்னர் நாட்டில் பொருளாதார நெருக்கடி தோன்றுவதற்கு முன்னதாக இருந்த விலையை விடவும் 500 சதவீத அதிகரிப்பாகும். அதே போன்றே மீனவர்கள், விவசாயிகள் அல்லது குறைந்த வருமானம் பெறும் குடும்பங்கள் என்று வறியவர்களின் எரிபொருளாக இருக்கின்ற மண்ணெண்ணெயின் விலையும் சுமார் 400 சதவீதத்தினால் அதிகரித்திருக்கிறது.

ராஜபக்ச அரசாங்க காலத்தில் மக்களின் வாழ்க்கைத்தரங்களில் ஏற்பட்ட வீழ்ச்சியே அரசாங்கத்தின் மீது வெறுப்புணர்ச்சியை ஏற்படுத்தியது. இலங்கை நாணயத்தின் பெறுமதி வீழ்ச்சியடைந்து அதன் விளைவாக பணவீக்கம் கடுமையாக அதிகரித்ததால் மக்களின் சேமிப்புகள் அரைவாசிக்கும் கூடுதலாக குறைந்துவிட்டன.

இன, மத மற்றும் சமூக வேறுபாடுகளுக்கு அப்பால் மக்கள் சகலரும் தங்களது அடிப்படை தேவைகளைப் பெறமுடியாமல் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கிய தன் காரணத்தினால்தான் போராட்ட இயக்கத்துக்கு பேராதரவு கிடைத்தது. அரசாங்கம் அதன் கவனத்தைக் குவிக்கவேண்டிய பிரதான பிரச்சினை இதுவேயாகும். துரதிர்ஷ்டவசமாக, மக்களின் வாழ்க்கைத்தரங்கள் மற்றும் சேமிப்புகளின் வீழ்ச்சியைத் தணிப்பதற்கு அரசாங்கம் முன்னுரிமை கொடுப்பதாக தெரியவில்லை.

### தவறான விளக்கம்

கலந்தாலோசித்து முடிவுகளை எடுக்கும் அணுகுமுறையை கடைப்பிடிக்காத அரசாங்கத்தின் போக்கு சிறியரக தொழில்துறையின் கடுமையான கண்டனத்திற்குள்ளாகியிருக்கிறது. பொருத்தமான குறியீடுகளின் கீழ் பட்டியலிடப்பட்ட உப உள்ளீடுகளைப் பற்றி கருத்தில் எடுக்காமல் 300 பொருட்களின் இறக்குமதி மீது தற்காலிக தடை விதிக்கும் தீர்மானம் எடுக்கப்பட்டிருக்கிறது என்று இலங்கை ஐக்கிய தேசிய தொழிற்துறை கூட்டமைப்பின் தலைவி தான்யா அபேசுந்தர கூறியிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இலங்கையின் பொருளாதாரத்தின் ஒரு பெரிய பகுதியாக சிறிய மற்றும் நடுத்தர தொழில்நிறுவனங்களே அமைகின்றன. இவை சகல தொழிற்துறைகளினதும் 80 சதவீதமானவையாக இருக்கின்றன. இவை ஆரம்பநிலை, இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை என்று பொருளாதாரத்தின் சகல துறைகளிலும் காணப்படுவதுடன் தேர்ச்சிபெற்ற, ஓரளவு தேர்ச்சி பெற்ற மற்றும் தேர்ச்சியற்ற ஆட்களுக்கு வேலைவாய்ப்புக்களை வழங்குகின்றன. சிறிய மற்றும் நடுத்தர தொழிற்துறைகள் தொழில்வாய்ப்புகளுக்கு இன்றியமையாத மூலங்களாக இருப்பதுடன் தொழில்வாய்ப்புகளின் 35 சதவீதத்துக்கு பங்களிப்புச் செய்கின்றன.

“எமது செயற்பாடுகளை தொடர இயலாத ஒரு நிலைக்கு நாம் வந்திருக்கிறோம். 300 பாவனைப் பொருட்களின் இறக்குமதியை தடைசெய்யும் தீர்மானத்தை எடுத்தவர்கள் உள்நாட்டு உற்பத்திகளைப் பற்றி விளங்கிக்கொள்ளவில்லை. தொழிலாளர்களின் சம்பளங்களை வழங்க இயலாத நிலை ஏற்படப்போவதால் 4,500 சிறிய மற்றும் நடுத்தர தொழில்துறை நிறுவனங்களைச் சேர்ந்த சுமார் 45 இலட்சம் தொழிலாளர்கள் வேலை இழந்து நடுத்தெருவிற்கு வரப்போகிறார்கள். அரசாங்க சேவையில் உள்ளவர்களுக்கு சம்பளங்களை வழங்கவும் பாராளுமன்ற உறுப்பினரகளின் செலவுகளுக்காகவும் ஒரு ட்ரில்லியன் ரூபா பணத்தை அச்சிடுவதற்கு அரசாங்கம் திட்டமிடுகிறது. ஆனால் நாட்டின் முதுகெலும்பாக விளங்கும் சிறிய மற்றும் நடுத்தர தொழிற்துறைகளை பாதுகாப்பதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை ” என்று தான்யா கூறினார்.

மக்களின் வாழ்க்கையும் தொழிற்துறைகளும் வழமைபோன்று நடைபெறுவது என்ற நினைப்பில் அரசாங்கம் நடந்துகொள்கிறது. இது துரதிர்ஷ்டவசமானது. போராட்ட இயக்கம் ஒன்று ஒருபோதும் முன்னெடுக்கப்படவில்லை என்பது போன்று தோன்றுகிறது. போராட்ட இயக்கம் உச்சக்கட்டத்தில் இருந்தபோது நாட்டைவிட்டு தப்பியோடிய முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவின் மீள்வருகை போராட்டம் தணிந்துவிட்டது அல்லது ஒடுக்கப்பட்டுவிட்டது என்ற நம்பிக்கையில் அரசாங்கம் இருக்கிறது என்பதன் அறிகுறியாகும். இதனால் ஆளும் கட்சியில் உள்ள சிலர் முன்னாள் ஜனாதிபதியை புதிய பிரதமராக நியமிக்கவேண்டும் என்றும் தற்போதைய ஜனாதிபதி ரணில் லிக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் உள்ள 134 ஆளும் கட்சியின் உறுப்பினர்களினால் வழிநடத்தப்படவேண்டும் என்றும் கோரிக்கை விடும் நிலை தோன்றியிருக்கிறது.

30 அமைச்சர்களுடன் 40 பிரதியமைச்சர்களையும் நியமித்து அவர்களுக்கும் அவர்களது பரிவாரங்களுக்கும் தனிப்பட்ட மற்றும் கோர்ப்பரேட் நண்பர்களுக்கும் சலுகைகளைச் செய்வதற்கு பெருமளவு நிதியை அநாவசியமாக ஒதுக்குவதற்கு அரசாங்கத்துக்கு ஊக்கத்தைக் கொடுத்திருக்கிறது சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து எதிர்பார்க்கப்படும் நிதியுதவி. இதுவே இன்றைய அரசியல் யதார்த்தம். இராணுவத்துக்கு அதிகளவு நிதியை ஒதுக்கும் போக்கும் தொடருகிறது. அதன் விளைவாக வங்குரோத்து நிலை தொடருவதையே காணக்கூடியதாக இருக்கிறது. ஆட்சிசெய்யப்படும் மக்களின் நலன்களைக் கவனிக்காமல் அதிகாரத்தில் இருப்பவர்கள் தனிப்பட்ட பயன்களை அனுபவிக்கும் பழைய ஆட்சிமுறையே தொடருவதையும் காணக்கூடியதாக இருக்கிறது.

> **30 அமைச்சர்களுடன் 40 பிரதியமைச்சர்களையும் நியமித்து அவர்களுக்கும் அவர்களது பரிவாரங்களுக்கும் தனிப்பட்ட மற்றும் கோர்ப்பரேட் நண்பர்களுக்கும் சலுகைகளைச் செய்வதற்கு பெருமளவு நிதியை அநாவசியமாக ஒதுக்குவதற்கு அரசாங்கத்துக்கு ஊக்கத்தைக் கொடுத்திருக்கிறது சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து எதிர்பார்க்கப்படும் நிதியுதவி. இதுவே இன்றைய அரசியல் யதார்த்தம். இராணுவத்துக்கு அதிகளவு நிதியை ஒதுக்கும் போக்கும் தொடருகிறது. அதன் விளைவாக வங்குரோத்து நிலை தொடருவதையே காணக்கூடியதாக இருக்கிறது.**

ஒரு புறத்தில், அனர்த்தத்தனமான வங்குரோத்து நிலையில் இருந்தும் நினையாப்பிரகாரமான அதன் விளைவுகளில் இருந்தும் நாடு தப்புவதற்கான சாத்தியப்பாடுகள் தெரிகின்றன. அரசாங்கத்துக்கு பயனுறுதியுளடைய தொழில்நுட்ப ஆலோசனை கிடைக்கப்பெறுவதை சர்வதேச நாணய நிதியமும் பாரிஸ் கழகமும் ஏனையவர்களும் உறுதிசெய்வார்கள் என்பதே அதற்கு காரணமாகும். இந்த ஆலோசனை நடைமுறைப்படுத்தப்பட்டால் அரசாங்கத்தினால் கூடுதல் கடன்களைப் பெறக்கூடியதாக இருக்கும் என்கிற அதேவேளை சர்வதேச நிதிவழங்குநர்களிடம் பெற்ற கடன்களை திருப்பிச் செலுத்தவும் வாய்ப்பு கிட்டும். ஆனால் தேசிய பொருளாதாரத்தின் உற்பத்தி ஆற்றலை அதிகரிப்பதை விடுத்து அரசாங்கம் தொடர்ந்தும் பதவியில் இருப்பதற்கு அரசியல் ஆதரவை வழங்குபவர்களுக்கு அந்தரங்கமாக உதவி செய்வதில் நாட்டம் காட்டப்படுவதே பிரச்சினையாக இருக்கிறது. அதேவேளை அவசர கடன்களை திருப்பிச்சலுத்துவதற்காக மக்கள் மேலும் கஷ்டத்துக்குள்ளாக்கப்படுவார்கள்.



கலாநிதி ஜெகான் பெரேரா

### வேறு காரணிகள்

மக்களை தொல்லைக்குள்ளாக்குகின்ற அடிப்படையான மனிதஉரிமைகள் பிரச்சினைகளை அரசாங்கம் தொடர்ந்து அலட்சியம் செய்வது துரதிர்ஷ்டவசமானது. சர்வதேச மனித உரிமைகள் சமூகத்தின் கண்டனத்துக்கு அரசாங்கம் உள்ளாகியிருக்கிறது. ஜெனீவாவில் அடுத்தவாரம் தொடங்கவிருக்கும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரில் கடுமையான கண்டனத்திற்கு உள்ளாகக்கூடிய துரதிர்ஷ்டவசமான சூழ்நிலையை இலங்கை எதிர்நோக்குகிறது. மனித உரிமைகள் பேரவையினால் வெளிப்படுத்தப்பட்ட அக்கறைகள் தொடர்பில் இலங்கையில் பதவியில் இருந்த அரசாங்கங்கள் வேறுபட்ட நிலைப்பாடுகளை கடைப்பிடித்து வந்திருக்கின்றன.

இலங்கை தொடர்பில் புதிய தீர்மானம் ஒன்றைக் கொண்டுவருவதா அல்லது மனித உரிமைகள் கண்காணிப்பு பொறிமுறையை உள்ளடக்கிய தற்போதைய தீர்மானத்தையே தொடருவதா என்பதை மனித உரிமைகள் பேரவை தீர்மானிக்கும் என்று எதிர்பார்க்கப் படுவதால் தற்போதைய கூட்டத்தொடர் நாட்டுக்கு மிகவும் முக்கியமானதாகும். ஜி.எஸ்.பி.பிளஸ் வரிச்ச லுகை என்பது இலங்கையில் மனித உரிமைகள் பேணப் படுகின்ற நிலைவரத்திலேயே தங்கியிருக்கிறது என்ற ஐரோப்பிய ஒன்றியத்தின் நிலைப்பாட்டை அடிப்படை யாகக் கொண்டு நோக்கும்போது இம்மாதம் மனித உரிமைகள் பேரவையில் மேற்கொள்ளப்படக்கூடிய தீர்மானம் தேசிய பொருளாதாரத்துக்கு பாரிய விளைவுகளைக் கொண்டுவரக்கூடியதாக இருக்கும் எனலாம்.

மனித உரிமைகள் பிரச்சினையில் வெளித்தலையீடு கடந்த காலத்தில் நிராகரிக்கப்பட்டது. மனித உரிமைகள் பேரவையின் 51 வது கூட்டத்தொடரிலும் அத்தகைய நிலைப்பாடே இலங்கையினால் தொடர்ந்து கடைப்பிடிக்கப்படும். மனித உரிமைகள் பிரச்சினைகளை கையாளுவதற்கு கடைப்பிடிக்கப்படுகின்ற தந்திரோபாயங்கள் முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது என்பதை காட்டுவதற்கான உறுதியான சான்றுகளைக் கொண்டிருக்கவேண்டும். அவ்வாறானால்தான் மனித உரிமைகள் பேரவையின் கண்காணிப்பில் இருந்து இலங்கையை விலக்கக்கூடியதாக இருக்கும்.

ஆனால் மனித உரிமைகளைப் பேணுவது தொடர்பில் இலங்கையின் கடந்தகால செயற்பாடுகள் அண்மைய எதிர்காலத்தில் அதற்கான சாத்தியத்தை ஏற்படுத்தக்கூடியவையாக இல்லை. மனித உரிமைகள் பேரவையும் ஐரோப்பிய ஒன்றியமும் மனித உரிமைகள் தொடர்பில் வெளிப்படுத்துகின்ற அக்கறைகளை அதுவும் குறிப்பாக பயங்கரவாதத் தடைச்சட்டம் குறித்த அவற்றின் விசனத்தை அரசாங்கம் அலட்சியம் செய்வது புத்திசாலித்தனமானதல்ல.

நியாயப்பாடற்ற குற்றச்சாட்டுகளின் பேரில் போராட்ட இயக்கத்தின் உறுப்பினர்களை அச்சுறுத்தி கைதுசெய்வதற்கு அரசாங்கம் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை பயன்படுத்திக்கொண்டிருக்கிறது.

(09ஆம் பக்கம் பார்க்க)

# பாரத் ஜோடோ: ராகுல் காந்தியின் கன்னியாகுமரி - காஷ்மீர் ஒற்றுமை பயணம்



முரளிதரன் காசி விஸ்வநாதன்

கடந்த மே மாதம் உதய்பூரில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் முடிவு செய்யப்பட்டபடி, “பாரத் ஜோடோ யாத்திரையை” கன்னியாகுமரியில் நேற்று செப்டம்பர் 7ஆம் தேதி புதன்கிழமை மாலையில் தொடங்கியது. காங்கிரஸ் முன்னாள் தலைவர் காந்தி. கன்னியாகுமரியில் தொடங்கிய இந்த பயணம், 150 நாட்களுக்குப் பிறகு காஷ்மீரில் நிறைவடையும் வகையில் திட்டமிடப்பட்டிருக்கிறது.

இந்த யாத்திரையில் பங்கேற்பதற்காக ராகுல் காந்தி செவ்வாய்க்கிழமை இரவு சென்னை வந்தடைந்தார். புதன்கிழமை காலை ஏழு மணியளவில் சென்னையை அடுத்த சிறிபெரும்புதூரில் உள்ள தமது தந்தையும் முன்னாள் பிரதமருமான ராஜீவ் காந்தியின் நினைவிடத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் அஞ்சலி கூட்டத்தில் ராகுல் கலந்து கொண்டார்.

அதற்குப் பிறகு சென்னையில் இருந்து திருவனந்தபுரம் செல்லும் ராகுல் காந்தி, அங்கிருந்து பிற்பகல் 2 மணியளவில் கன்னியாகுமரியை வந்தடைந்தார். மாலை மூன்று மணியளவில் திருவள்ளுவர் சிலை, அதற்குப் பிறகு விவேகானந்தர் மண்டபம், காமராஜர் மண்டபம் ஆகியவற்றுக்குச் சென்று விட்டு மாலை 4.10 மணியளவில் மண்டபத்தை வந்தடைந்தார் ராகுல் காந்தி.

மாலை 4.30 மணியளவில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தேசிய கொடியை ராகுல் காந்தியிடம் அளித்தார். அங்கிருந்து தேசிய கொடியுடன் கடற்கரை சாலையில் தொண்டர்களுடன் நடக்கும் ராகுல் காந்தி மாலை 5 மணியளவில் “இந்திய ஒற்றுமைப் பயணத்தை“ முறைப்படி துவக்கி வைத்தார்.

இந்த நிகழ்ச்சியையொட்டி, மாலையில் பொதுக்கூட்டம் ஒன்றுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. புதன்கிழமை இரவில் விவேகானந்தர் கல்லூரியில் ராகுல் காந்தி தங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இன்று வியாழக்கிழமை காலை 6 மணியளவில் விவேகானந்தர் கல்லூரியில் இருந்து யாத்திரை துவங்குகிறது. செப்டம்பர் 10ஆம் திகதி வரை தமிழ்நாட்டில் பல்வேறு மாவட்டங்கள் வழியாக திட்டமிடப்பட்டுள்ள யாத்திரை பிறகு கேரளாவிற்குள் நுழைகிறது.

காங்கிரஸைப் பொறுத்தவரை, வட இந்தியாவில் பல மாநிலங்களில் ஆட்சிக்கு வரும் நிலையிலோ, முக்கிய எதிர்கட்சியாகவோ இருந்தாலும், இந்த யாத்திரையை தமிழ்நாட்டில் இருந்து துவங்க முடிவு செய்யப்பட்டிருப்பது மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகப் பார்க்கப்படுகிறது.

பாரதிய ஜனதா கட்சி, 1990களில் நடத்திய ரத யாத்திரை சோம்நாத்தில் துவங்கி அயோத்தியில் நிறைவுபெறும் வகையில் திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால், இந்த யாத்திரை கன்னியாகுமரியில் இருந்து காஷ்மீர் வரை இந்தியாவின் மையப் பகுதியில் செல்லும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளது.

”இந்த நடை பயணத்தின் பிரதான நோக்கமே இந்தியாவின் அரசியலமைப்பை பாதுகாப்பதுதான். 5,000 ஆண்டுகளாக இந்திய சமூகம் ஏற்றத் தாழ்வுகளால் நிரப்பப்பட்டது. இந்த ஏற்றத்தாழ்வுகளை சனாதன தர்மம் “சரி” என்கிறது. அன்றைய சமூகம் அதை ஏற்றுக் கொண்டது.

**ஆர்எஸ்எஸ் முழக்கத்துக்கு எதிரான யாத்திரை**

இந்த ஏற்றத் தாழ்வுகளை நியாயப்படுத்த கடவுளின் பெயரையும் மதத்தின் பெயரையும் சனாதனிகள் பயன்படுத்தினார்கள். ஆனால், “காந்தி” அந்த ஏற்றத் தாழ்வுகளை ஏற்கவில்லை. மறுப்பு தெரிவித்தார். சிறந்த ஆன்மிகவாதியாகவும் ராமரின் மீது பக்தி கொண்டவர் என்பதாலும் அவர் முன்வைத்த சீர்திருத்தங்களை இந்தியா ஏற்றுக் கொண்டது.

அவர்தான் முதன் முதலில் “தீண்டாமை ஒரு பெருங்குற்றம்” என்றார். மகாத்மா இதைச் சொன்னபோது பெரும் எழுச்சி ஏற்பட்டது. இப்போது 70 ஆண்டுகள் கழித்து மீண்டும் ஆர்.எஸ்.எஸ். தைரியமாக “சனாதனம்” காப்பாற்றப்பட வேண்டும் என்கிறது, இந்தியா ஒரே நாடு, ஒரே கலாசாரம், ஒரே மொழி, ஒரே இறை வழிபாட்டைக் கொண்டது என்கிறது.

இந்தியா ஒரு தேசம். பல பிராந்தியங்களின் கலவை. இந்தியாவில் 100க்கணக்கான மொழிகள் உள்ளன. இறைவழிபாட்டைப் பொறுத்தவரை பல நூறு பிரிவுகள் இந்து மதத்திலேயே உள்ளன. இது இல்லாமல் கிறிஸ்தவம், இஸ்லாம், சைனம், சீக்கியம் என பல மதங்கள் உள்ளன. இந்த தவறான சனாதான நம்பிக்கையை தகர்க்கவே ராகுல் காந்தி இந்த நடைபயணத்தை துவக்கியிருக்கிறார். எனவே ராகுல் மேற்கொண்டிருக்கும் இந்த நடைபயணம் என்பது புரட்சிகரமான, சமூகத்தில் மாற்றத்தை ஏற்படுத்தக்கூடியது.” என்கிறார் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவரான கே.எஸ். அழகிரி.



சுதந்திரத்திற்குப் பிறகு இந்தியாவில் நடத்தப்பட்ட பெரும்பாலான யாத்திரைகள், சம்பந்தப்பட்ட அரசியல் கட்சிகள் தங்களை வலுப்படுத்திக்கொள்ளும் நோக்கில் நடத்தியவை. ஆனால், இந்த யாத்திரையின் நோக்கம் அதுவல்ல என்கிறது காங்கிரஸ் கட்சி.

”இது அரசியல் யாத்திரை அல்ல. நாட்டை ஒற்றுமையாக்கும் யாத்திரை. எப்படி இருந்த இந்தியாவை இப்படி ஆக்கிவிட்டார்களே என்று மக்களிடம் சுட்டிக்காட்டும் யாத்திரை” என்கிறார் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஆனந்த் சிறிநிவாசன்.

**தேர்தலுடன் தொடர்பா?**

“கிரிக்கெட் மேட்ச்சில் ஒருவர் கேட்சை நழுவவிட்டால் அவரது மதத்தை வைத்து அவரை “ட்ரோல்“ செய்கிறார்கள். போன முறை பாகிஸ்தானிடம் இந்தியா தோற்றபோது முகமது ஷமியை “ட்ரோல்” செய்தார்கள். ஆமிர் கான் நடித்த படத்தை புறக்கணிக்கச் சொல்கிறார்கள். இது போல சுதந்திர இந்தியாவில் நடந்ததே இல்லை. இதைத்தான் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்,” என்கிறார் ஆனந்த் சிறிநிவாசன்.

இந்த யாத்திரைக்கும் நாடாளுமன்ற தேர்தலுக்கும் தொடர்பே இல்லை என்கிறார் அவர்.

“தேர்தல் 2024ல்தான் வரவிருக்கிறது. 2022ல் இந்த யாத்திரை நடக்கிறது. இது தேர்தலுக்காக நடத்தப்படும் யாத்திரை இல்லை. எந்த இடத்திலாவது கைச் சின்னத்தைப் பயன்படுத்தியிருக்கிறோமா என்று பாருங்கள்” என்கிறார் ஆனந்த் சிறிநிவாசன்.

இந்தப் பயணத்தின் மூலம் இந்தியாவின் பல்வேறு தரப்பினரின் மனநிலையைப் புரிந்துகொள்வதுதான் ராகுல் காந்தியின் நோக்கமாக இருக்கக்கூடும். இந்தப் பயணத்திற்கு முன்னேற்பாடாகவும் பல்வேறு தரப்பினரின் மனநிலையைப் புரிந்து கொள்ளும்விதத்திலும் 150க்கும் மேற்பட்ட சிவில் குழுவினரை ராகுல் காந்தி சந்தித்துப் பேசியிருக்கிறார்.

கன்னியாகுமரியிலும் 8ஆம் திகதி முதல் பத்தாம் தேதிவரை பல சிவில் சொசைட்டிக் குழுக்களை ராகுல்காந்தி சந்தித்துப்பேச ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பல தரப்பினரையும் சந்திப்பதோடு, அவர்களது பார்வைகளையும் தெரிந்து கொள்ளும் வகையில் இந்த யாத்திரை கன்னியாகுமரியில் துவங்கவிருக்கிறது.

ஆனால், செவ்வாய்க்கிழமை மாலை வரையில் கன்னியாகுமரி நகருக்குள் அது தொடர்பான பரபரப்பு ஏதுமில்லை. சில இடங்களில் காங்கிரஸ் கட்சியின் கொடிகளும் சில இடங்களில் சுவர் விளம்பரங்களும் செய்யப்பட்டுள்ளன. கலைக்குழு ஒன்று, இந்த யாத்திரை தொடர்பான விழிப்புணர்வு நாடம் ஒன்றை சில இடங்களில் நடத்தியது.

பல சுற்றுலா பயணிகளிடம் பேசியபோது, அடுத்த நாள் இப்படி ஒரு நிகழ்வு நடக்கவிருக்கிறது என்ற தகவலே அவர்களுக்கு ஆச்சரியமாக இருந்தது.

# சர்வதேச நாணய நிதியத்தின்...

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆயுதமேந்திய தமிழ் தீவிரவாதிகளினால் அரசாங்கத்துக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட கிளர்ச்சியை கையாளுவதற்காக 1979 ஆம் ஆண்டில் பயங்கரவாதத் தடைச்சட்டம் கொண்டுவரப்பட்டது. தமிழ்க் கிளர்ச்சிக்கு எதிராகவும் 1988--1989 ஜே.வி.பி.கிளர்ச்சிக்கு எதிராகவும் பரந்தளவில் பயங்கரவாதத் தடைச்சட்டம் பயன்படுத்தப்பட்டது.


2019 ஏப்ரில் குண்டுத் தாக்குதல்களைத் தொடர்ந்து முஸ்லிம் சமூகத்துக்கு எதிராகவும் அந்த சட்டம் பயன்படுத்தப்பட்டது. சகல தரப்பிலும் படுமோசமான மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றன. பெருமளவில் கண்டனத்துக்குள்ளான இந்த சட்டத்தை அமைதிவழியில் முன்னெடுக்கப்பட்ட போராட்ட இயக்கத்தை ஒடுக்குவதற்கு பயன்படுத்துவது நியாயமற்றதாகும்.

1990 ஆம் ஆண்டில் கிழக்கு மாகாணத்தில் போரினால் இடம்பெயர்ந்த மக்கள் தங்கியிருந்த வந்தாறுமூலை முகாமில் இருந்து 180 க்கும் அதிகமானவர்கள் காணாமல்செய்யப்பட் சம்பவத்தின் 32 வது வருட நினைவு அடுத்தவாரம் அனுஷ்டிக்கப்படவிருக்கிறது. கிழக்கு பல்கலைக்கழகத்தின் முன்னாள் உபவேந்தர் பேராசிரியர் ரி. ஜெயசிங்கமும் அந்த முகாமால் தங்கியியுந்தவர்களில் ஒருவர். அவர் முகாமின் பொறுப்பதிகாரியாகவும் அவர் செயற்பட்டார். தனது பராமரிப்பில் இருந்தவர்களில் 180 பேர் பலவந்தமாக முகாமில் இருந்து கூட்டிச்செல்லப்பட்டதை நேரில் கண்டவர் அவர்.

அந்த மக்களுக்கு நேர்ந்த கதியை கண்டறிவதற்கு அடுத்தடுத்து பதவிக்கு வந்த அரசாங்கங்கள் எதையும் செய்யவில்லை என்பது பேராசிரியர் ஜெயசிங்கத்தின் வேதனை. அதை அவர் பல சந்தர்ப்பங்களில் எழுத்தில் வெளிக்காட்டியாருக்காறார். இந்த அரசாங்கமும் எதையும் செயயப்போவதில்லை. என்னதான் சர்வதேச நாணய நிதியம் நிதியுதவி செய்தாலும் அதை பாரிஸ் கழகம் வரவேற்றாலும், இந்த பிரச்சினைகள் கவனிக்கப்படாவிட்டால், தீர்வு காணப்படாமல் இருக்கும் இனப்பிரச்சினையும் மனித உரிமை மீறல்களுக்கு பொறுப்பானவர்கள் தண்டிக்கப்படாமல் சட்டத்தில் இருந்து விடுபாட்டு உரிமை பெற்றவர்கள் போன்று திரியும் போக்கும் இலங்கையை மேலும் பிளவையும் முரண்நிலையையும் நோக்கிய சரிவிலேயே கொண்டுசெல்லும்.

# புலமைச் சிகரம் — தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

18) 

i) இத் திண்ம உருவில் எத்தனை முகங்கள் உள்ளன? ................................

ii) இத் திண்ம உருவில் எத்தனை உச்சிகள் உள்ளன? ................................

19)  நிறந் தீட்டப்பட்ட பகுதியைப் பின்னமாக எழுதுக.

..........................................

20) தரப்பட்ட எண் கோலங்களில் அடுத்துவரும் எண்ணை எழுதுக.

i) 122 , 124 , 126 , ............. , ...........    ii) 18 , 15 , 12 , ............. , ...........

21) | 3, 9, 14, 6, 10, 12, | பெட்டிக்குள் உள்ள எண்களில் மூன்றின் மடங்குகளைத் தெரிவு செய்து ஒழுங்கு முறையில் எழுதுக.

.............................................................

22) ஒரு பழக்கூடையில் 620 அப்பிள் பழங்களும் 125 மாம்பழங்களும் உண்டு. கூடையில் உள்ள மொத்தப் பழங்களின் எண்ணிக்கையை எழுதுக.

.....................................................................................

23) ஒரு கிளையில் 480 பூக்கள் மலர்ந்திருந்தன. அவற்றில் 25 பூக்களைப் பறித்தெடுத்தால் கிளையில் எஞ்சியிருக்கும் பூக்களின் எண்ணிக்கை யாது?

..............................................................

24) பழப்பாகுப் போத்தல் ஒன்றில் 3$l$ 300$ml$ பானம் அடங்கியுள்ளது. அதனை 3 மாணவர்களிடையே சமமாகப் பகிரப்பட்டதெனின் ஒருவருக்குக் கிடைத்த பான அளவு யாது?

.............................................................

25) 500g சீனியின் விலை ரூபா 48.00 எனின் 1500g சீனியின் விலை யாது? ..................................................

26) **பின்வரும் சிட்டையைப் பூரணப்படுத்துக.**

| பொருள் | வாங்கிய அளவு | ஒரு கிலோகிராமின் விலை | | | பெறுமதி | |
|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | சதம் | | ரூபா | சதம் |
| பருப்பு | 2kg | 95 | 00 | i) | ............ | ......... |
| தேயிலை | 500g | 200 | 00 | ii) | ............ | ......... |
| | | மொத்தப்பணம் | | | ............ | ......... |

27) கடிகார முகத்தில் பி.ப. 3.30 மணி காட்டுகின்றது. கடிகாரம் காட்டும் நேரத்தை நியம நேரத்தில் எழுதுக.

.....................................................

28) 8m 50cm நீளமான துணியில் 3m துணி வெட்டி எடுக்கப்பட்டது எனின் எஞ்சியிருக்கும் துணியின் நீளம் யாது?

28) 8m 50cm நீளமான துணியில் 3m துணி வெட்டி எடுக்கப்பட்டது எனின் எஞ்சியிருக்கும் துணியின் நீளம் யாது?



.....................................................

29) ஒரு பூங்கொத்தில் மூன்று பூக்கள் வீதம் 12 பூங்கொத்துக்களில் எத்தனை பூக்கள் உள்ளன?

.....................................................    (30 புள்ளிகள்)

❖ **இலக்கம் 30 தொடக்கம் 59 வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தெ செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

30) சூரிய நமஸ்காரத்தின் நான்காம் படிநிலை எது?

1)     2)     3) 

31) வடமாகாணத்தில் அமைந்துள்ள குளம்
1) அபயவாவி    2) இரணைமடுக்குளம்    3) பராக்கிரமபாகு சமுத்திரம்

32) உள் மூச்சு வாங்குதல் வெளி மூச்சு விடுதல் என்பது மனதை ஒருநிலைப்படுத்தும் செயற்பாட்ட எந்த படிமுறை ஆகும்?
1) திடசித்தம்    2) உதிப்பு    3) உடலைத் தளர்த்தல்

33) தேசிய இலச்சினையின் பூவிதழ் வட்டத்தின் மத்தியில் இருப்பது எது?
1) சூரியன்    2) வாளேந்திய சிங்கம்    3) நெற்கதிர்

34) பிரித்தானியர்களால் முழுமையாக இலங்கை கைப்பற்றப்பட்ட ஆண்டு எது?
1) 1976    2) 1851    3) 1815

35) வருடத்தின் முதல் மாதமும் இறுதி மாதமும் பூக்கும் பூக்கள் எவை?
1) இறப்பர், வேம்பு    2) இறப்பர், தாழம்பூ    3) பிறைப்பூ, நாவல்

## விடைகள்

**18.** 1) 6    2) 8    **19.** $\frac{3}{10}$
**20.** 1) 128, 130    2) 9, 6
**21.** 3, 6, 9, 12
**22.** 745    **23.** 455
**24.** 1l 100ml / 1100ml    **25.** ரூபாய் 144.00
**26.** 1) 190    2) 100    3) 290
**27.** 15 : 30    **28.** 5m 50cm / 550cm
**29.** 36 பூக்கள்
**30.** 1    **31.** 2    **32.** 3
**33.** 2    **34.** 3    **35.** 2

## கல்வி tv CHANNEL-1

**08.09.2022**
**வியாழக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | புவியியல் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | புவியியல் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கணிதம் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மாதிரி வினாத்தாள் |
| | மறு ஒளிபரப்பு | மறுஒளிபரப்பு-LIVE கணிதம் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| | | மாதிரி வினாத்தாள் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.30 | தரம்-10 | புவியியல் |

## கல்வி tv CHANNEL - 2

**08.09.2022**
**வியாழக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | தமிழ் |
| 09.00 | தரம்-02 | சமயம் |
| 09.45 | தரம்-03 | தமிழ் |
| 10.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 11.15 | தரம்-04 | தமிழ் |
| 12.30 | தரம்-04 | Computer |
| 01.15 | தரம்-05 | தமிழ் |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சமயம் |
| 06.00 | தரம்-03 | தமிழ் |
| 06.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 07.30 | தரம்-04 | தமிழ் |
| 08.15 | தரம்-04 | Computer |
| 09.00 | தரம்-05 | தமிழ் |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி-paper |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | தமிழ் |
| 12.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 01.15 | தரம்-04 | தமிழ் |
| 02.00 | தரம்-04 | Computer |
| 02.45 | தரம்-05 | தமிழ் |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |



## பொலிஸ் தினத்தை முன்னிட்டு கல்முனை மாநகரில் சிரமதானம்!

நிந்தவூர், செப். 08

156ஆவது பொலிஸ் தினத்தை முன்னிட்டு சுற்றுச்சூழலை பாதுகாக்கும் பொருட்டும் டெங்கு நோயின் தாக்கத்தை கட்டுப்படுத்தும் நோக்குடனும் கல்முனை நகரின் முக்கிய பகுதிகள் சிரமதானம் மூலம் துப்பரவு செய்யப்பட்டுள்ளன.

கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம். ரம்ஷீன் பக்கீர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கல்முனை உதவி பொலிஸ் அத்தியட்சகர் ரீ. எச். டி. எம். எல். புத்திக அதிதியாக கலந்து கொண்டு மேற்பார்வை செய்தார்.

பொலிஸ் நிலையத்தின் பிரதம பொலிஸ் பரிசோதகரும் சமூக பொலிஸ் பிரிவு பொறுப்பதிகாரியுமான ஏ.எல்.ஏ. வாஹிட் இச்சிரமதான பணிகளை நெறிப்படுத்தியிருந்தார்.

இதன்போது பொலிஸ் நிலையத்தை சூழவுள்ள பகுதி, பிரதான பஸ் நிலையம், மாநகர சபை அலுவலகப் பகுதி உட்பட வீதியோரங்களில் தேங்கிக் காணப்பட்ட கழிவுகள் அகற்றப்பட்டன.

இதில் பொலிஸ் நிலையத்தின் சமூக சேவை பொலிஸ் பிரிவு, சுற்றுச்சூழல் பொலிஸ் பிரிவு, போக்குவரத்து பிரிவு, சிறு குற்றத்தடுப்பு பிரிவு, பெருங் குற்றத்தடுப்பு பிரிவு, சிறுவர்- பெண்கள் விசாரணைப் பிரிவு என்பன பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ-6)

## அர்ப்பணிப்பான சேவையாலேயே கிழக்கு மாகாணம் முதலிடத்தில்!

### இஸ்லாமிய ஆசிரியர் சங்கம்

நிந்தவூர், செப். 08

உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் பகுப்பாய்வில் கிழக்கு மாகாணம் முதலிடம் பெற்றமைக்கு அர்ப்பணிப்புள்ள ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் கல்விப் பணிப்பாளர்களின் சிறப்பான முன்னெடுப்புக்கள் காரணம் என இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் சங்கத்தின் தலைவர் ஜெஸ்மி எம்.மூஸா விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு,

கல்வி அமைச்சு உயர்தரப் பரீட்சையை மேற்கோளாக வைத்து மேற்கொண்ட பகுப்பாய்வில் கிழக்கு மாகாணம் ஒன்பதாவது இடத்திலிருந்து முதலாவது இடத்துக்கு முன்னேறியுள்ளது. இது மிகவும் சந்தோசமான செய்தியாகும்.

கடந்த இரண்டு வருடங்களில் கொரோனா மற்றும் பொருளாதார ஸ்திரமற்ற நிலைகளால் மாணவர்களின் பாடசாலை கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டிருந்தன. எனினும், கிழக்கு மாகாண ஆளுநர், கல்வி அமைச்சின் செயலாளர், மாகாணப் பணிப்பாளர் ஆகியோரின் முறையான செயல்பாடுகளினால் பல்வேறு செயல்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. தொடரான



மாணவர் கல்விச் செயல்பாட்டில் இவர்கள் குறியாக இருந்து செயல்பட்டனர். கல்விப் பணிப்பாளர்களுக்கான அறிவுறுத்தல்களின் அடிப்படையில் பாடசாலை அதிபர்களின் முறையான கண்காணிப்பு அறிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன. பாடசாலைகள் மூடப்பட்டிருந்த காலங்களிலும் மாற்றீட்டுச் செயல்பாடுகள் ஆசிரியர்களால் முன்னெடுக்கப்பட்டன.

இம்முறை, கிழக்கு மாகாணத்திலிருந்து 17 ஆயிரத்து 25 பேர் பரீட்சைக்குத் தோற்றியவர்களில் 11 ஆயிரத்து 237 பேர் பல்கலைக்கழக நுழைவு தகுதியை பெற்றுள்ளதுடன் 472 பேர் 3 பாடங்களிலும் ஏ சித்திகளைப் பெற்று சாதனை படைத்துள்ளனர். இதற்கு உந்து சக்தியாக அமைந்த அனைவருக்கும் பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கிறோம் - என்றார். (ஐ - 6)

# காத்தான்குடியில் கடலரிப்பு பாதிப்புக்களும் அதிகரிப்பு!

### தடுக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை

காத்தான்குடி, செப். 08

**மட்டக்களப்பு காத்தான்குடி கடற்கரையில் கடலரிப்பால் மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதுடன், இந்தப் பகுதியில் உள்ள கட்டடங்களும் சேதமடைந்து வருகின்றன என்று பிரதேச மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.**

காத்தான்குடி கடற்கரையின் ஏத்துக்கால் பகுதியில் கடந்த ஒருவாரத்துக்கும் மேலாக கடலரிப்பு ஏற்பட்டு வருகிறது. அத்துடன், மீன்பிடி படகுகளை கடலுக்கு கொண்டு செல்வதிலும் மீனவர்கள் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

இப்பகுதியிலுள்ள மீன்பிடி படகுகள் கரையை அண்மித்த வீதியோரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. அப்பகுதியிலுள்ள சிற்றுண்டிச் சாலை, கட்டடங்கள், மரங்கள் பாதிக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் மீனவர்கள் தெரிவித்தனர்.



கடலரிப்பை தடுக்க கடற்றொழில் திணைக்களம் மற்றும் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென பொது மக்கள் துறைசார்ந்த அதிகாரிகளிடம்வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ஐ)

## தென்எருவில்பற்று பிரதேச செயலரை இடமாற்றம் செய்யுமாறு கோரிக்கை!

மட்டக்களப்பு, செப். 08

மண்முனை தென்எருவில் பற்று பிரதேச செயலாளரை இடமாற்றம் செய்யாவிட்டால் எதிர்வரும் வாரத்தில் பிரதேச செயலகத்தை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தப்போவதாக மண்முனை தென் எருவில் பற்று பிரதேசசபை உறுப்பினர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். நேற்று மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரனை மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபையின் உபதவிசாளர் மே.வினோராஜ் தலைமையி லான பிரதேசசபை உறுப்பினர் கள் சந்தித்தனர்.

இதன்போது அவர்கள் மகஜர் ஒன்றையும் அரசாங்க அதிபரிடம் கையளித்தனர். ட்டக்களப்பு மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலகப்பிரிவில் உள்ள பெரும்பாலான மக்கள் பிரதேச செயலாளரை இடமாற்றம் செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை தம்மிடம் வழங்கியுள்ளனர் என்றும் இதன்போது அவர்கள் தெரிவித்தனர். (ஐ)

## சட்டவிரோத அங்காடிகளை அகற்றுவதற்கு நடவடிக்கை!

நிந்தவூர், செப். 05

கல்முனை மாநகர சபை ஆள்புல எல்லையினுள் பொதுப் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுத்தும் சட்டவிரோத அங்காடி வியாபார தலங்களை அகற்றும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கல்முனை மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம். றகீப் விடுத்துள்ள பணிப்புரைக்கமைய மாநகர சபையின் வருமான பரிசோதகர்கள் இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

பிரதான வீதிகளிலும் உள்ளூர் வீதிகளிலும் சட்டவிரோதமாக பலகை, மேசை மற்றும் கொட்டகை அமைத்து மீன், மரக்கறி, பழ வகைகள், இளநீர் மற்றும் இதர பொருட்களின் வியாபார நடவடிக்கைகளால் வாகனப் போக்குவரத்துகளுக்கும் பாதசாரிகளுக்கும் பல்வேறு அசௌகரியங்கள் ஏற்படுகின்றன என்று முறையிடப்பட்டது. இதற்கமையவே இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படுகிறது.

அத்துட்னு, சட்டவிரோத அங்காடி வியாபாரங்களில் இருந்து உடனடியாக விலகிக் கொள்வதுடன் தமது வியாபாரத் தலங்களை அகற்றுமாறும் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. (ஐ-6)




## 100 நாள் மக்கள் குரல் போராட்டம் நேற்று அம்பாறையில் நடைபெற்றது!

பொத்துவில், செப். 08

மக்களின் கௌரவமான அரசியல் தீர்வுக்கான கோரிக்கையை முன் வைத்து கவனவீர்ப்பு போராட்டம் அம்பாறையில் நேற்று நடைபெற்றது.

"வடக்கு கிழக்கு மக்களுக்கு கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வு வேண்டும்" எனும்100 நாட்கள் செயல் முனைவு மக்கள் குரல் பேராட்டமே இவ்வாறு பொத்துவில் இன்ஸ்பெட்டர்க் ஏத்தம் பகுதியில் நடைபெற்றது.

அம்பாறை மாவட்டத்தில் போரால் பாதிக்கப்பட்ட மக்கள், சிவில் அமைப்புக்கள் மற்றும் பெண்கள் இணைந்து எமக்கு நிரந்தரமான அரசியல் உரிமை வேண்டும் என்ற கோரிக்கையின் அடிப்படையில் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, எங்கள் நிலம் எமக்கு வேண்டும், நடமாடுவது எங்கள் உரிமை, பேச்சு சுதந்திரம் எங்கள் உரிமை, ஒன்று கூடுவது எங்கள் உரிமை, என்ற கோஷங்களை எழுப்பி னர். (ஐ)

# 15 பிரதமர்களை கண்ட மகாராணி எலிசபெத்!



லண்டன், செப். 08

மகாராணி இரண்டாம் எலிசபெத் கண்ட இங்கிலாந்தின் 15ஆவது பிரதமர் என்ற சிறப்பை லிஸ் டிரஸ் பெற்றுள்ளார்.

இங்கிலாந்து நாட்டின் ஆறாம் ஜோர்ஜ் மன்னர் 1952ஆம் ஆண்டு மரணம் அடைந்தபோது, அந்த நாட்டின் ராணியானவர், அவரின் மகள் எலிசபெத். இரண்டாம் எலிசபெத் என அழைக்கப்படுகிற அவருக்கு அப்போது வயது 25.

அப்போது இங்கிலாந்து பிரதமராக இருந்தவர் வின்ஸ்டன் சர்ச்சில், அதன் பின்னர் சேர் அன்ரனி ஈடன் தொடங்கி பொறிஸ் ஜோன்சன் வரை 13 பிரதமர்களை எலிசபெத் நியமித்து அவர்களோடு பணியாற்றியுள்ளார்.

தற்போது இங்கிலாந்தின் பிரதமராக லிஸ் டிரஸை ராணி இரண்டாம் எலிசபெத் நியமித்துள்ளார். அந்த வகையில் ராணி இரண்டாம் எலிசபெத் கண்ட இங்கிலாந்தின் 15ஆவது பிரதமர் என்ற சிறப்பை லிஸ் டிரஸ் பெறுகிறார்.

இரண்டாம் எலிசபெத் பதவிக்காலத்தில் இங்கிலாந்து 3 பெண் பிரதமர்களைக் கண்டிருக்கிறது. மார்கிரெட் தட்சர், தெரசா மே, லிஸ் டிரஸ் ஆகியோரே அவர்கள். அத்துடன், 11 பிரதமர்கள் கன்சர்வேடிவ் கட்சியினர். 4 பேர் தொழில் கட்சியை சேர்ந்தவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# 8 வயது சிறுவனின் அற்புதம்



பனியில் நனையும் மானின் வியக்க வைக்கும் இந்த ஒளிப்படத்தை 8 வயதேயான ஜோசுவா கொக்ஸ் எடுத்துள்ளார். அத்துடன், இயற்கை வரலாற்று அருங்காட்சியகத்தின் சிறந்த ஒளிப்படத்துக்கான விருதையும் வென்றுள்ளார்.

கடந்த ஜனவரியில் எடுக்கப்பட்ட இந்த ஒளிப்படம் தனது சிறிய டிஜிற்றல் கமெராவை பயன்படுத்தி எடுத்துள்ளார். சிறுவனின் தந்தையும் ஜூலியன் கொக்ஸூம் வனவிலங்கு ஒளிப்படவியலாளராவார். ஜோசுவா தனது 3 வயதிலேயே ஒளிப்படங்களை எடுக்க ஆரம்பித்துவிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.


# சீனா, இந்தியாவுடனான உறவை மேலும் வலுப்படுத்துகிறது ரஷ்யா!

மொஸ்கோ, செப். 08

சீனா, இந்தியா, மத்திய கிழக்கு நாடுகள், இலத்தீன் அமெரிக்கா மற்றும் ஆபிரிக்கா நாடுகளுடன் உறவை மேலும் வலுப்படுத்தும் வகையில் தயாரிக்கப்பட்ட வெளியுறவு கொள்கைக்கு ரஷ்ய ஜனாதிபதி புடின் ஒப்புதல் அளித்துள்ளார்.

உக்ரைன்மீது போர் தொடுத்ததால் ரஷ்யாமீது அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் பொருளாதார தடை விதித்தன.

இந்த விடயத்தில், இந்தியா நடுநிலை வகித்தது. இதே போல் சீனா, மத்திய கிழக்கு நாடுகள், இலத்தீன் அமெரிக்கா மற்றும் ஆபிரிக்க நாடுகள் ரஷ்யாவின் நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவிக்கவில்லை.



இந்நிலையில் 'ரஷ்யன் உலகம்' என்ற பெயரில் தனது வெளியுறவு கொள்கையை ரஷ்யா மாற்றி அமைத்துள்ளது. இதற்கு ஜனாதிபதி புடின் ஒப்புதல் அளித்துள்ளார்.

"ரஷ்ய உலகின் பாரம்பரியத்தையும் கொள்கைகளையும் ரஷ்யா பாதுகாக்க வேண்டும். வெளிநாடுகளில் வசிக்கும் ரஷ்யர்களின் உரிமைகள் மற்றும் நலன்கள், ரஷ்ய கலாசார அடையாளங்களை காக்க ரஷ்ய கூட்டமைப்பு ஆதரவு அளிக்கிறது. கடந்த 1991ஆம் ஆண்டு சோவியத் ஒன்றியம் பிரிந்தது பூகோள அரசியல் பேரழிவு.

"முன்னாள் சோவியத் ஒன்றியம் அமைதியை ரஷ்யா தொடர்ந்து மதிக்கிறது. இதை மேற்கத்தைய நாடுகள் எதிர்க்கின்றன. சீனா, இந்தியா, மத்திய கிழக்கு, லத்தீன் அமெரிக்கா மற்றும் ஆபிரிக்க நாடுகளுடனான ஒத்துழைப்பை ரஷ்யா அதிகரிக்க வேண்டும்", என்று இது குறித்து வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# தண்ணீருக்குள் தலைகீழாக நடக்கும் பெண்ணுக்கு வரவேற்பு

நியூயோர்க், செப். 08

நீச்சல் தடாகத்தில் பெண் ஒருவர் தலைகீழாக நடந்து சாகசத்தில் ஈடுபடும் வீடியோ இணையத்தில் பிரபலமாகியுள்ளது.



தடாகத்தில் நீர்மட்டத்துக்கு கீழே இந்தப் பெண் தலைகீழாக 'நடந்து' சென்று, திடீரென 360 பாகை சுழன்று, தடாகத்தின் அடியில் வைக்கப்பட்டிருக்கும் கைப்பை ஒன்றை தனது தோளில் மாட்டிக்கொண்டு கொண்டு செல்லும் காட்சி பதிவாகியுள்ளது.

இந்த காணொலி கடந்த ஜூலையில் பகிரப்பட்டது. தற்போது இந்தக் காணொலி 5.5 கோடிக்கும் அதிகமான பார்வைகளை பெற்றுள்ளது.

கிறிஸ்டினா மகுசென்கோ எனும் 27 வயதான இந்தப் பெண் அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்தை சேர்ந்த ரஷ்யராவார்.

இசை ஒருங்கு நீச்சல் வீராங்கனையான இவர். தண்ணீருக்கு அடியில் நடனமாடும் காணொலிகளையும் பதிவிட்டு வருகிறார். அவரை இன்ஸ்ட்ராகிராமில் 68 இலட்சம் பேர் பின்தொடர்ந்து வருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# புலியுடன் கடுமையாக போராடி குழந்தையை காப்பாற்றிய தாய்!

புதுடில்லி, செப். 08

இந்தியாவின் மத்திய பிரதேசத்தில் புலியிடம் சிக்கிய தனது குழந்தையை கடுமையா கப் போராடி தாயொருவர் மீட்டுள்ளார். புலி தாக்கியதில் தாயும் குழந்தையும் காயம டைந்த நிலையில் மீட்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப் பட்டுள்ளனர்.



மத்திய பிரதேச மாநிலம் போபாலில் உள்ள மாலா ரோஹானியா கிராமத்தைச் சேர்ந்த அர்ச்சனா என்ற பெண், 15 மாத மான ரவிராஜ் என்ற மகனை தூக்கிக் கொண்டு வெளியே சென்றுள்ளார். அப்போது புதரில் பதுங்கி இருந்த புலி ஒன்று தாயின் கையில் இருந்த குழந்தையை தாக்க தொடங்கியது. இதை கண்டு அதிர்ச்சி அடைந்த தாய் தனது குழந்தையை மீட்க புலியுடன் கடுமையாகப் போராடியுள்ளார்.

அந்த புலி குழந்தையை விடாமல் தலையை இறுகப் பிடித்து தாக்க முயன்றுள்ளது. அப்போது அர்ச்சனா புலியை குழந்தையின் தலையை கடிக்க விடாமல் தடுத்துள்ளார். அத்துடன், அவர் புலியை காலால் எட்டி உதைத்தும், கையால் குத்தியும் சண்டையிட்டு உள்ளார்.

பெண்ணொருவர் தனது குழந்தையைக் காப்பாற்ற புலியுடன் சண்டையிடும் காட்சியை பார்த்த அப்பகுதி மக்கள், ஒன்றுகூடி அவர்களைக் காப்பாற்ற விரைந்தனர்.

அதிகளவானவர்கள் திரண்ட நிலையில் குழந்தையை கைவிட்டு புலி அங்கிருந்து தப்பி ஓடியது. பின்னர் புலி தாக்கியதில் காயமடைந்த குழந்தையையும் தாயையும் மீட்ட கிராம மக்கள் அவர்களை வைத்தியசாலையில் சேர்ப்பித்தனர். (ஐ)

# கொரோனா தொற்றுக்கு மூக்கு வழியாக மருந்து!

ஹைதராபாத், செப். 08

பாரத் பயோரெக் நிறுவனம் தயாரித்துள்ள மூக்கு வழியாக செலுத்தக்கூடிய தடுப்பு மருந்துக்கு இந்தியாவில் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் பெருந்தொற்றுக்கு எதிராக ஹைதராபாத்தைச் சேர்ந்த பாரத் பயோரெக் நிறுவனம் மூக்கு வழியாக செலுத்தக்கூடிய தடுப்பு மருந்தை உருவாக்கியுள்ளது.

இந்த தடுப்பு மருந்து சுமார் 4 ஆயிரம் தன்னார்வலர்களுக்கு செலுத்தி பரிசோதிக்கப்பட்டது. அதில் பக்க விளைவுகளோ, விரும்பத்தகாத பிற விளைவுகளோ ஏற்பட்டதாக தகவல் இல்லை.

இந்த தடுப்பூசியின் அவசர கால பயன்பாட்டுக்கு அனுமதி கேட்டு விண்ணப்பிக்கப்பட்டிருந்தது. இதைப் பரிசீலித்து இந்திய தலைமை மருந்து கட்டுப்பாட்டாளர், இந்த மூக்கு வழிதடுப்பு மருந்துக்கு தனது அனுமதியை வழங்கியது.

இதை இந்திய மத்திய சுகாதார அமைச்சர் மன்சுக் மாண்டவியா தனது ருவிற்றர் பதிவில் தெரிவித்துள்ளார். அத்துடன், இந்தத் தடுப்பு மருந்து 18 வயதுக்கு மேற்பட்டோருக்கு பயன்படுத்தப்படும் என்றும் குறிப்பிட்டுள்ளார். (ஐ)



# ஆசியக் கிண்ண கிரிக்கெட்

# இந்தியாவை வீழ்த்தி இலங்கை த்ரில் வெற்றி!



டுபாய், செப். 08

ஆசிய கிண்ணத் தொடரின் சுப்பர் 4 சுற்றில் ஆட்டத்தில் இந்தியாவை 6 விக்கெட் வித்தியாசத்தில் இலங்கை அணி த்ரில் வெற்றி பெற்றது.

டுபாய் கிரிக்கெட் மைதானத்தில் நடைபெற்ற இந்த போட்டியில் இலங்கை அணி நாணயச் சுழற்சியில் வென்றது. இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடி 173 ஓட்டங்களை எடுத்தது.

அணித்தலைவர் ரோஹித் சர்மா மற்றும் கே. எல். ராகுலும் தொடக்க வீரர்கள் களம் இறங்கி இருந்தனர். இரண்டாவது ஓவரில் ராகுல், 6 ஓட்டங்கள் எடுத்து மகீஷ் தீக்ஷன சூழலில் எல். பி. டபிள்யூ. முறையில் விக்கெட்டை இழந்தார். அடுத்த ஓவரில் விராட் கோலி ஓட்டம் ஏதும் எடுக்காமல் மதுஷங்கவின் பந்தில் ‘க்ளீன் போல்ட்’ ஆகி வெளியேறினார்.

அதன் பின்னர் அணித் தலைவர் ரோஹித் மற்றும் சூர்யகுமார் யாதவ் இணைந்து அணியை மீட்டனர். இருவரும் 58 பந்துகளில் 97 ஓட்டங்கள் எடுத்தனர். ரோஹித் 72 ஓட்டங்களிலும், சூர்யகுமார் 34 ஓட்டங்களிலும் விக்கெட்டை இழந்தனர். அதன் பின்னர் வந்த ஹார்திக் பாண்ட்யா 17 ஓட்டங்களில் வெளியேறினார். ஹூடா 3 ஓட்டங்களிலும், பந்த் 17 ஓட்டங்களிலும் விக்கெட்டை இழந்தனர்.

20 ஓவர்கள் முடிவில் இந்திய அணி 8 விக்கெட்கள் இழப்புக்கு 173 ஓட்டங்களை எடுத்தது.

மதுஷங்க 24 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டை வீழ்த்தினார்.

174 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கை இலங்கை விரட்டியது. இந்தப் போட்டியில் இந்தியா வெற்றி பெற்றாக வேண்டிய கட்டாயத்தில் விளையாடியது.

பதும் நிசாங்க மற்றும் குசல் மெண்டிஸ் தொடக்க வீரர்களாகக் களம் இறங்கினர். இருவரும் முதல் விக்கெட்டுக்கு அவர்கள் 97 ஓட்டங்களுக்கு இணைப்பாட்டத்தை ஏற்படுத்தினர். இந்திய அணி முதல் 10 ஓவர்களில் விக்கெட் வீழ்த்தவில்லை. 11.1 ஓவர்களில் இலங்கை 97 ஓட்டங்களை குவித்து அட்டகாசமான தொடக்கத்தை பெற்றிருந்தது.

ஆனால், 14.1 ஓவர்களில் 110 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்கள் என சறுக்கியது. ‘பழைய’ இலங்கையாக மாறுகிறதா என்ற கவலை ரசிகர்களுக்கு எழுந்த போது, பானுக ராஜபக்ஷ, தசூன் சானக ஆட்டத்தின் போக்கை மீண்டும் கட்டுப்பாட்டில் கொண்டு வந்தனர்.

12ஆவது ஓவரில் சஹால் அடுத்தடுத்து 2 விக் கெட்களை கைப்பற்றினார்.

தொடர்ந்து 14 மற்றும் 15வது ஓவரில் அஸ்வின் மற்றும் சஹால் தலா ஒரு விக்கெட்களை வீழ்த்தினர். அதன் மூலம் இலங்கை அணிக்கு ஆட்டத்தில் கொஞ்சம் அழுத்தம் கூடியது. பனுக ராஜபக்ஷ மற்றும் தசூன் சானக கிரீஸில் இருந்தனர். இருவரும் நேர்த்தியாக இந்திய அணியின் பந்துவீச்சை சமாளித்தனர்.

இறுதி ஓவரில் அந்த அணியின் வெற்றிக்கு 7 ஓட்டங்கள் தேவைப்பட்டன. ஒரு பந்து எஞ்சியிருந்த நிலையில் இலங்கை அணி 174 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது.

ஆட்டநாயகன் தசூன் சானக. இதன் மூலம் இந்திய அணி கிட்டத்தட்ட ஆசிய கிண்ணம் தொடரில் இருந்து வெளியேறும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. இந்த போட்டியில் இந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளர்கள் ஒரு விக்கெட்டைக்கூட கைப்பற்றவில்லை.

சுப்பர் 4 சுற்றில் இலங்கை அணி முதல் இரண்டு போட்டிகளிலும் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறும் வாய்ப்புப் பிரகாசமாக உள்ளது.

இந்தியாவிடம் ஆப்கானிஸ்தான் தோல்வியடைந்தால் மட்டுமே இலங்கைக்கு இறுதிக்கு செல்வதில் நெருக்கடி ஏற்படும்.

மறுவளமாக, எஞ்சிய இரண்டு போட்டிகளிலும் பாகிஸ்தான் பெரிய தோல்விகளை சந்தித்து, இந்தியா ஆப்கானை வீழ்த்தினால் மாத்திரமே இந்தியாவுக்கு ஏதாவது வாய்ப்புண்டு. அத்துடன், இந்த ஆசிய கிண்ண இறுதியாட்டத்தில் இந்திய-பாகிஸ்தான் அணிகள் மோதாது.

ஆசிய கிண்ணத்தில் இலங்கை தொடர்ந்து பெரிய இலக்குகளை துரத்தி வருகிறது. தொடர்ந்து 3ஆவது முறையாக 170 இற்கும் அதிக ஓட்டங்களை விரட்டியடித்துள்ளது. (ஐ)

# நியூசிலாந்துடான தொடர் அவுஸ்திரேலியா வெற்றி

கெய்ர்ன்ஸ், செப். 08

நியூசிலாந்து அணிக்கு எதிரான முதல் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் 2 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது அவுஸ்திரேலிய அணி.

அவுஸ்திரேலியாவின் கெய்ர்ன்ஸ் நகரில் நேற்றுமுன்திமன் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய செய்த நியூசிலாந்து அணி 50 ஓவர்களில் 9 விக்கெட்கள் இழப்புக்கு 232 ஓட்டங்கள் எடுத்தது. அதிகபட்சமாக டேவன் கொன்வே 46, அணித்தலைவர் கேன் வில்லியம்சன் 45, ரொம் லேதம் 43, டேரில் மிட்செல் 26 ஓட்டங்கள் எடுத்தனர்.

அவுஸ்திரேலிய அணி சார்பில் கிளென் மக்ஸ்வெல் 4, ஜோஸ் ஹசில்வூட் 3 விக்கெட்கள் வீழ்த்தினர். 233 ஓட்டங்கள் இலக்குடன் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி 12 ஓவர்களில் 44 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்களை இழந்து தத்தளித்தது. அரோன் பின்ச் 5, ஸ்டீவ் ஸ்மித் 1, மார்னஸ் லபுஷேன் 0, மார்கஸ் ஸ்ரொய்னிஸ் 5, டேவிட் வோர்ணர் 20 ஓட்டங்களில் நடையை கட்டினர்.

6ஆவது விக்கெட்டுக்காக இணைந்த அலெக்ஸ் காரே, கமரூன் கிரீன் ஜோடி அணியை சரிவில் இருந்து மீட்டு வெற்றிப் பாதைக்கு அழைத்துச் சென்றது. அலெக்ஸ் காரே 99 பந்துகளில், ஒரு சிக்ஸர், 8 பௌண்ட்ரிகளுடன் 85 ஓட்டங்கள் சேர்த்து ஆட்டமிழந்தார். இந்த ஜோடி 6-வது விக்கெட்டுக்கு 158 ஓட்டங்கள் சேர்த்தது.

இதன் பின்னர் களமிறங்கிய கிளென் மக்ஸ்வெல் 2, மிட்செல் ஸ்டார்க் 1 ஓட்டங்களில் வெளியேறினர். எனினும் ஆடம் ஷம்பா உறுதுணையுடன் கமரூன் கிரீன் 92 பந்துகளில், ஒரு சிக்ஸர், 10 பௌண்ட்ரிகளுடன் 89 ஓட்டங்கள் விளாச அவுஸ்திரேலிய அணி 45 ஓவர்களில் 8 விக்கெட்கள் இழப்புக்கு 233 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது.

ஆடம் ஷம்பா 13 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தார். 2 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற அவுஸ்திரேலிய அணி 3 ஆட்டங்கள் கொண்ட ஒருநாள் கிரிக்கெட் போட்டித் தொடரில் 1-0 என முன்னிலை வகிக்கிறது. (ஐ)



ஈழநாடு



# இலங்கை கடனிலிருந்து மீள்வது சீனா, இந்தியாவின் கைகளில்!

## சர்வதேச பொருளாதார நிபுணர்

லண்டன், செப். 08

**இலங்கையின் சர்வதேச நாணய நிதிய பிணை எடுப்புத் திட்டம் அதன் மோசமான பொருளாதார நெருக்கடியில் ஒரு திருப்புமுனையாக இருக்கலாம். எனினும், நிலையான அரசியலில் இருந்து அது வெகு தொலைவில் உள்ளது.**

அத்துடன் சீனா, இந்தியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளிடம் இருந்து கடன்மறுசீரமைப்பை பெற வேண்டும் என்பதும் முக்கியத்துவம் பெறுகிறது என்று ரொயட்டர்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் 290 கோடி டொலர் யதார்த்தமாக மாறுவதற்கு பல கட்டங்கள் இருக்கின்றன என்பதை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவார். செலவினக் குறைப்புக்கள், வரி உயர்வுகள் மற்றும் கடன் தள்ளுபடிகள் ஆகியவை திவாலான நாடுகளுக்கு ஒரு பொதுவான சூத்திரம் என்பன அதில் அடங்குகின்றன.

நாட்டின் கடன்கள் மிகவும் சிக்கலானவை. மொத்த வரம்பின் மதிப்பீடுகள் 85 பில்லியன் முதல் 100 பில்லியன் வரை இருக்கலாம். இந்தநிலையில் பீஜிங், புதுடில்லி, ரோக்கியோ மற்றும் பல தரப்புக்கள் இந்த கடன்களை மறுசீரமைப்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

பல தசாப்தங்களாக வளர்ந்து வரும் சந்தை நெருக்கடிகளை அவதானித்து வரும் முன்னணி பொருளாதார நிபுணரான சார்ள்ஸ் ரொபர்ட்சன், தாம் இதுவரை கண்டிராத மிகப்பெரிய குழப்பங்களில் இதுவும் ஒன்று" என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்தநிலையில் சீனா, இந்தியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளின் "உறுதிகள்" இல்லாமல் சர்வதேச நாயண நிதியின் பணம் புழக்கத்துக்கு வராது என்று அந்த நிதியின் இலங்கைக்கான பேச்சுக் குழுவின் தலைவர் பீற்றர் ப்ரேயர் வலியுறுத்தியுள்ளார்.

எனவே, இந்தக் கடன் மறுசீரமைப்பு விவாதங்களை முன்னெடுப்பதற்கு ஒரு கூட்டுத் தளத்தை உருவாக்குவதற்கான ஆக்கபூர்வமான வழிகளைக் கண்டறிவது மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்று ப்ரேயர் ரொய்ட்டர்ஸிடம் கூறியுள்ளார்.

கடன் மறுசீரமைப்புக்கான கோரிக்கைக்கு இதுவரை பதிலளிக்காத பீஜிங், சாம்பியாவின் மறுசீரமைப்பில் அதன் முக்கிய பங்கை வழங்கியமை போன்று இலங்கை விடயத்திலும் செயல்படும் என்று நம்பிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

எனினும் அது நடக்குமா என்று இன்னும் சமிக்ஞை இல்லை. இந்தியாவும் இதுவரை எந்த கருத்தும் தெரிவிக்கவில்லை.

இந்தநிலையில் இலங்கையைப் பொறுத்தவரை, சீனா மிகப்பெரிய கடன் வழங்கும் நாடு. அதன் பங்கேற்பு இல்லாமல் எந்த திட்டமும் வெற்றியடையாது என்று பெயர் வெளியிடாத ஜப்பானிய அரசாங்க அதிகாரி ஒருவர் கூறியுள்ளார். (ஐ)

# கோட்டாபய கொள்கையை செயல்படுத்திய விதம் தவறு

## மகிந்தானந்த அளுத்கமகே

கொழும்பு, செப். 08

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எடுத்த தவறான தீர்மானம் காரணமாகவே பெரும்போக செய்கை உற்பத்தி பாதிக்கப்பட்டது என்று முன்னாள் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

அத்துடன், அடுத்தவரின் குழந்தைக்கு பிறப்புசான்றிதழ் வழங்கச் சென்றே தான் பிரச்னையில் சிக்கிக் கொண்டார் என்றும் கூறியுள்ளார்.

நேற்றுமுன்தினம் பாராளுமன்றில் உரையாற்றிய அவர், கோட்டாபய எடுத்த கொள்கை தீர்மானம் தவறானது அல்ல. ஆனால், அந்த கொள்கையை ஒரேயடியாக செயல்படுத்தியமையே தவறாகும். கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக பதவி வகித்தமையால், இந்த கருத்துக்களை அப்போது நான் கூறவில்லை.

இரசாயன உரத்தை தடை செய்ய முடிவெடுத்தபோது, அதனை நான் எதிர்த்தேன். எனினும், அது தமது விவசாய அமைச்சுக்கு பொறுப்பானது அல்ல என்று கோட்டாபய என்னிடம் கூறினார்.

இதேவேளை, கோட்டாபய எடுத்த தீர்மானம் காரணமாகவே இலங்கையில் ஊட்டச்சத்து குறைப்பாடு ஏற்பட்டது என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. 2015ஆம் ஆண்டு காலத்தில் இருந்த அரசாங்கம் எடுத்த தீர்மானத்தின் விளைவே ஊட்டச் சத்து குறைபாடு.

கோட்டாபயவால் எடுக்கப்பட்ட தீர்மானத்தால் ஏற்பட்ட விளைவுகளை காணப்பதற்கு இன்னும் சில காலம் செல்லும்- என்றும் கூறினார். (ஐ)

# 2048இல் இலங்கையை கடனற்ற நாடாக்குவோம்!

கொழும்பு, செப். 08

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையின் கீழ் 2048இல் இலங்கையை கடனற்ற நாடாக்குவோம். இதற்கு எவ்வித நிபந்தனைகளுமின்றி அர்ப்பணிப்புடன் பாடுபடத் தயாராக உள்ளோம். எனது தாய் வீட்டிலிருந்து இனியொரு போதும் வெளியேற மாட்டேன் என்று அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

ஐ. தே. கவின் 76ஆவது சம்மேளனம் நேற்றுமுன்தினம் செவ்வாய்கிழமை கொழும்பிலுள்ள சுகததாச உள்ளக அரங்கில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வுக்கு வருகை தரும் போது நான் ஓர் அந்நியனாக உணரவில்லை. காரணம் இதற்கு முன்னர் தந்தையுடன் கோபித்துக் கொண்டு எனது இல்லத்திலிருந்து வெளியேறியிருந்தேன். எந்தவொரு நபரின் வாழ்விலும் இது இயல்பாக இடம்பெறும் ஒன்றாகும். எனினும், மீண்டும் கோபம் மறந்து தந்தையுடன் இணைந்துள்ளேன்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனிநபராக சவாலை ஏற்று பின்னால் திரும்பிப் பார்த்த போது, அங்கு எவரும் இல்லை. எனவேதான் அவர் தனித்து விடக்கூடாது என்பதற்காக நாம் எமது ஒத்துழைப்பை வழங்கினோம். பாராளுமன்றத்தில் சுமார் ஒரு மாதம் என்ற குறுகிய காலத்திற்குள் 134 பேரின் விருப்பைப் பெற்றுள்ளார். விளையாட்டென்றால் இதுவே விளையாட்டாகும். தலைமைத்துவம் என்றால் இதுவே தலைமைத்துவமாகும்.

சுதந்திரத்தின் பின்னரும் கையேந்தும் நாடாக இலங்கை காணப்படுகிறது. இதற்குக் காரணம் தவறான தீர்மானங்ளே ஆகும். எவ்வாறிருப்பினும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமைத்துவத்தின் கீழ் 2048இல் இலங்கையை கடனற்ற நாடாக மாற்றியமைக்க முடியும். அதற்கு எவ்வித நிபந்தனையுமின்றி அர்ப்பணிப்புடன் செயல்பட நாம் தயார். நாட்டை ஸ்திரமாக்குவதற்கு ஒத்துழைப்பை வழங்காதவர்களுக்கு எதிரான போராட்டத்தை நாம் விரைவில் ஆரம்பிப்போம்.

எனது தாய் வீட்டுடன் மீண்டும் இணைந்துள்ளேன். இனி இங்கிருந்து செல்லப் போவதில்லை. ஆசை ஆனால், பயம் என்று கூறுபவர்கள் தமது தலைவர்கள் இணையவில்லை எனில் நீங்களாவது இணையுங்கள் என்று வலியுறுத்துகின்றேன் - என்றார். (ஐ)

### ஆயிரம் தொன் அரிசி மியன்மார் வழங்குகிறது!

கொழும்பு, செப். 08

இலங்கைக்கு, மியான்மர் ஆயிரம் மெற்றிக் தொன் - சுமார் 17 கோடி ரூபாய் மதிப்பிலான வெள்ளை அரிசியை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

அந்த நாட்டுக்கு நியமிக்கப்பட்ட புதிய இலங்கைத் தூதுவர் ஜானக பண்டாரவின் வேண்டுகோளின் பிரகாரம் இந்த நன்கொடை வழங்கப்பட்டுள்ளது.

இந்த மாத இறுதியில் இந்த அரிசி இலங்கையை வந்தடையும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது. (ஐ)

# ராஜபக்ஷக்களின் அரசியல் வகிபாகம் நாட்டுக்கு தேவை!

## இதுவே மக்களின் விருப்பம் என்கிறார் சாகர

கொழும்பு, செப். 08

"ராஜபக்ஷக்களின் அரசியல் வகிபாகம் நாட்டுக்குத் தேவை என்ற நிலைப்பாட்டிலேயே பெரும்பாலான இலங்கையர்கள் இன்றும் உள்ளனர். எனவே, ராஜபக்ஷக்கள் பதவி விலகி இருக்கக்கூடாது என்பதே எமது கட்சியின் நிலைப்பாடாக உள்ளது" - என்று சிறீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

செய்தியாளர்களிடம் கருத்து வெளியிட்டபோதே மேற்கண்டவாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

"ராஜபக்ஷக்கள் தாம் வகித்த பதவிகளில் இருந்து விலகியமை தவறு என்பதே நான் உட்பட எமது கட்சியில் உள்ள பெரும்பாலான உறுப்பினர்களின் கருத்தாக உள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு 69 இலட்சம் பேர் வாக்களித்தனர். எனவே, அவரைப் பதவியிலிருந்து நீக்கும் அதிகாரம் அந்த மக்களுக்கே காணப்படுகின்றது. மாறாக வீதியில் ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்தவர்களுக்கு அந்த அதிகாரம் கிடையாது.

அவரை நீக்கும் அதிகாரம் அந்த மக்களுக்கே உள்ளது. மாறாக வீதிக்கு இறங்கும் ஒரு இலட்சம் பேரால் அதைச் செய்ய முடியாது. மகிந்த ராஜபக்ஷவை பிரதமராக்குவதற்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மைப் பலம் கிடைத்தது. எனவே, அவர் பதவி விலகியதும் தவறு.

இந்நாட்டில் மக்கள் ஆசியுடன்தான் ராஜபக்ஷக்கள் ஆட்சிக்கு வந்துள்ளனர். பலவந்தமாக வந்ததில்லை. எமது கட்சி மக்களுடன்தான் உள்ளது. நாம் மக்கள் மத்தியில் செல்வோம். ராஜபக்ஷக்களின் தேசிய அரசியல் அவசியம் என்ற நிலைப்பாட்டிலேயே பெரும்பாலான மக்கள் உள்ளனர்" - என்றார். (ஐ)

# 70வீத சம்பள அதிகரிப்பு இல்லையேல் நாடளாவிய தொழில்சங்க போராட்டம்!

## தோட்டப் பணியாளர் சங்கம் எச்சரிக்கை

நுவரெலியா, செப். 08

தமக்கு குறைந்தபட்ச சம்பளத்தில் 70வீத சம்பள அதிகரிப்பு வழங்கப்படாவிட்டால் உடனடியாக பெரியளவிலான தொழில்சங்க நடவடிக்கையில் ஈடுபடவுள்ளதாக இலங்கை தோட்ட பணியாளர் சங்கம் எச்சரித்துள்ளது.

இது தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்துள்ள சங்கத்தின் தலைவர் நிஷாந்த வன்னியாராச்சி, சம்பள அதிகரிப்பு தொடர்பில் தோட்ட முதலாளிமார் சம்மேளனத்துடன் பல சுற்று பேச்சுகள் நடத்தப்பட்டுள்ளன. இதன்போது தற்போதுள்ள குறைந்தபட்ச ஊதியத்தில் இருந்து 70வீத உயர்வு கோரப்பட்டது.

எனினும், எமது கோரிக்கைக்கு முதலாளிமார் சம்மேளனம் உடன்படவில்லை. பல தோட்ட நிறுவனங்கள், அதிக இலாபம் ஈட்டுகின்றன. அவை தமது உண்மையான இலாப நஷ்டங்களை அரசாங்கத்திற்கு வெளிப்படுத்துவதில்லை. இந்த நிலையில் அடுத்த வார பேச்சின்போது, 70வீத சம்பள உயர்வு வழங்காவிட்டால், நாடு தழுவிய தொழில் சங்கப் போராட்டத்தில் ஈடுபடத் தீர்மானித்துள்ளோம் - என்றார். (ஐ)

# அலரி மாளிகைக்குள் நுழைந்த மூவர் கைது!

கொழும்பு, செப். 08

கடந்த ஜூலை 09ஆம் திகதி அரசாங்கத்துக்கு எதிரான போராட்டத்தின்போது பிரதமரின் உத்தியோகபூர்வ இல்லமான அலரி மாளிகைக்குள் சட்டவிரோதமாக பிரவேசித்த மேலும் மூன்று சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு தெற்கு குற்றத் தடுப்பு பிரிவினரால் சந்தேக நபர்கள் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டனர்.

கைதானவர்களிடம் கொழும்பு தெற்கு குற்றத்தடுப்பு பிரிவினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## இலங்கையை...

வையின் ஆணையாளரின் அறிக்கை தொடர்பில் அவர் கருத்து வெளியிடுகையிலேயே மேற்கண்டவாறு கூறியுள்ளார் சுமந்திரன். மேலும்,

“இந்த அறிக்கையை ஒட்டி மூன்று விடயங்களைத் தெரிவிக்க விரும்புகின்றேன்.

முதலாவது - இந்த அறிக்கையைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வரவேற்கின்றது. இலங்கை அரசு பொறுப்புக்கூறல் விடயத்தில் தொடர்ந்து அசமந்தமாகப் பொறுப்பின்றிச் செயல்பட்டு வருவதை ஆணையாளரின் இந்த அறிக்கை அப்பட்டமாக, காட்டமாக வெளிப்படுத்தியுள்ளது.

இரண்டாவது - இதுவரை காலமும் ஆணையாளரின் அறிக்கை போர்க் குற்றங்கள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், மனித உரிமைகள் மீறல்கள் தொடர்பான பொறுப்புக்கூறல் பற்றியே வலியுறுத்தி வந்தது. இப்போது முதல் தடவையாகப் பொருளாதாரக் குற்றங்களுக்கும் பொறுப்புக் கூறப்பட வேண்டும் என்பதை ஆணையாளர் வலியுறுத்தி இருக்கின்றார். நாட்டைச் சீரழித்த அந்தக் குற்றவாளிகளையும் சட்டப்படி கையாளக் கோரும் அந்த வலியுறுத்தலை நாம் வரவேற்று வழிமொழிகின்றோம்.

மூன்றாவது - இலங்கையில் நடந்த போர் குற்றங்கள் மற்றும் கொடூரங்கள் தொடர்பில் பொறுப்புக்கூறல் நடவடிக்கைகள் சம்பந்தமாக அங்கத்துவ நாடுகள் உலகளாவிய ரீதியில் தமக்குள்ள சர்வதேச நீதியின் கடப்பாட்டின் அடிப்படையில், தவறிழைத்தவர்கள்மீது தத்தம் நாட்டிலேயே சட்ட, நீதி நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று ஆணையாளர் முன்மொழிந்திருக்கும் கோரிக்கையை நாங்களும் முழுமையாக வலியுறுத்துகின்றோம்.

இதேசமயம் இவ்விடயத்தை ஒட்டி அங்கத்துவ நாடுகளிடமும் நாம் மூன்று கோரிக்கைகளை முன்வைக்கின்றோம்.

முதலாவது - ஆணையாளரின் இந்தக் காட்டமான அறிக்கையை அடிப்படையாக வைத்து, அதனை ஒட்டி, இம்முறை இலங்கை தொடர்பில் ஒரு வலிமையான, செயல் திறனுள்ள, காத்திரமான பிரேரணை ஒன்றை முன்வைத்து தீர்மானமாக நிறைவேற்றும்படி வேண்டுகின்றோம்.

இரண்டாவது - ஆணையாளர் சுட்டிக்காட்டியபடி அங்கத்துவ நாடுகள் தமக்கு இருக்கும் உலகளாவிய பொறுப்புக்கூறல் நீதிக் கடப்பாட்டின் அடிப்படையில் இலங்கையில் தவறிழைத்தவர்களுக்கு எதிராகத் தங்கள் நாட்டில் உரிய சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வலியுறுத்துகின்றோம்.

மூன்றாவது - கடந்த 13 வருடங்களாக பொறுப்புக்கூறல் விடயத்தை இலங்கை முன்னெடுக்கவேயில்லை என்ற யதார்த்த புறச் சூழலில், இலங்கையின் இந்த விடயத்தை ஐ. நா. பாதுகாப்பு சபை ஊடாக சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திடம் ஒப்படைப்பது அல்லது பாரப்படுத்துவது நீண்ட தொடர் நடவடிக்கைகளாக அமைய வேண்டும் என்பது எமக்கு தெரியும்.” - என்றார். (ஐ)

## இலங்கையின்...

பெயர்கள், இடம்பெற்ற இடம் போன்ற விவரங்களுடன் தெரிவிக்கும் வகையில் இந்த வரைபடம் காணப்படுகின்றது

இந்த வரைபடம் மனித உரிமைகள் மீறல்கள் மற்றும் அது தொடர்பான குற்றங்கள் குறித்த ஐ. நாவின் பொறுப்புக்கூறல் நடவடிக்கைகளுக்கு அவசியமான அடிப்படை ஆதரவை வழங்குகின்றது.

இது தொடர்பில் மேலும் அந்த அமைப்பு தெரிவித்தவை வருமாறு,

இலங்கையின் சமீபத்தைய அரசியல் பொருளாதார நெருக்கடிகள் அரசாங்கத்தின் உயர்மட்டத்தில் பொறுப்புக்கூறல்கள் இல்லாததை மீண்டும் வெளிப்படுத்தியுள்ளன. மனித உரிமைகள் மீறல்கள் தொடர்பில் தண்டனையிலிருந்து விலக்களிக்கப்படுவதை வெளிப்படையாக அவதானிக்கலாம்.

பாதிக்கப்பட்டவர்களுக்கும் அவர்களின் குடும்பத்தவர்களுக்கும் உண்மை நீதி மற்றும் இழப்பீட்டுக்கான உரிமைகள் மறுக்கப்பட்டுள்ளன. ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் 51ஆவது அமர்வுக்கு முன்னதாக இலங்கையின் மனித உரிமைகள் நிலவரம் குறித்த ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளரின் அறிக்கை வெளியாகியுள்ள இந்த தருணத்தில் மோதல்கள் குறித்த இந்த வரைபடம் மனித உரிமைகள் மீறல்களின் அளவு பரவலான தன்மை பொறுப்புக்கூறலின் அவசியம் போன்றவற்றை உரிய நேரத்தில் நினைவூட்டும் வகையில் அமைந்துள்ளது.

ஷவரவேற்கத்தக்க விதத்தில் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் கடந்த வருட தீர்மானம் பொறுப்புக்கூறலை முன்னகர்த்துவதற்காக இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமைகள் மீறல்கள் மற்றும் குற்றங்கள் குறித்த ஆதாரங்களை ஆராய்ந்து சேகரித்து வைப்பதன் அவசியத்தை அங்கீகரித்திருந்தது.

இந்த மோதல் வரை படம் சர்வதேச மட்டத்தில் பொறுப்புக்கூறலை முன்னெடுத்து செல்வதற்கும் மற்றும் தங்கள் சொந்த உத்திகளை பின்பற்றுவதற்கும் ஐ. நா. மற்றும் உறுப்பு நாடுகளுக்கு துணைபுரியும். அத்துடன், ஒரு சிறந்த ஆராய்ச்சி கருவி பிராந்தியம் காலம் மற்றும் வன்முறைகளின் வகைகள் அடிப்படையில் இலங்கை சமூகத்தில் மோதலின் அளவு தாக்கத்தை பயனாளர்கள் அறிந்துகொள்ளக்கூடிய விதத்தில் இது காணப்படுகின்றது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ஐ)

## ‘யுனிசெவ்’...

கின்றது. இலங்கையின் சிறுவர் மந்தபோசனை தொடர்பில் அறிக்கையை வெளியிடுவதற்கு யுனிசெவ் அமைப்பு பயன்படுத்திய தரவுகள் திருப்திகரமானதாக இல்லை. அவர்கள் 2016 ஆம் ஆண்டுக்கான மக்கள் தொகை மற்றும் சுகாதார கணக்கெடுப்புக்களையே பயன்படுத்தியுள்ளனர்.

ஆனால், 2021 ஆம் ஆண்டின் இறுதியில் மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம் நடத்திய தேசிய அளவிலான கணக்கெடுப்பின்படி, குழந்தைகளின் வளர்ச்சி குன்றிய நிலை 13.2 சதவீதமாக குறைந்துள்ளதுடன், தற்போது அது 12.1 ஆக குறைந்துள்ளது. ஏனைய நாடுகளைப் போன்று இந்நாட்டில் சிறுவர்கள் உயிரிழக்கும் மற்றும் நோய்களுக்கு ஆளாகும் அபாயம் இல்லை.

மேலும், மராமஸ், குவோஷியோகர் போன்ற கடுமையான போசாக்குக் குறைபாடுகள் எதுவும் இல்லை எனவும் சுகாதார அமைச்சின் செயலர் கூறியுள்ளார்.

## சான்றிதழ்களுக்...

இறப்பு சான்றிதழ் பத்திர பிரதிகளை சமர்ப்பிக்க வேண்டும் என சில நிறுவனங்கள் வரையறைகளை விதித்துள்ளன.

இதன்காரணமாக பொதுமக்கள் இன்னல்களுக்கு முகங்கொடுத்துள்ளனர். இந்தநிலையில், குறித்த விடயம் பதிவாளர் நாயகத்தின் கவனத்துக்கும் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

இது குறித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள பதிவாளர் நாயகம், தெளிவான அத்தாட்சி பத்திரத்தின் பிரதி இருக்குமாயின், மீண்டும் புதிய பிரதி ஒன்றைப் பெற்றுக்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை என குறிப்பிட்டுள்ளார்.

அந்த சான்றிதழ் பிரதிகள், எந்த காலப்பகுதிக்கும் செல்லுபடியாகும். ஏதெனுமொரு சந்தர்ப்பத்தில், பிறப்பு, திருமண மற்றும் இறப்பு சான்றிதழ்களில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்குமாயின், திருத்தப்பட்ட புதிய பிரதியை பெற்றுக்கொள்ள வேண்டும் எனவும் கூறியுள்ளார். (ஐ)

# 4ஆவது பிரதமரை காண நான் விரும்பவில்லை!

## சன்ன ஜயசுமண எம். பி.

கொழும்பு, செப். 08

2023ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னர் புதிய பிரதமர் ஒருவரை நியமிக்கத் தயாராக இருப்பதாக ஆளுங் கட்சியின் சில தகவல்களும் அழைப்புகளும் கூறின என்று அநுராதபு ரம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் சன்ன ஜயசுமண பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இதற்கு தனது தரப்பிலிருந்து ஆதரவையும் கோரு வதாகவும் தெரிவித்தார்.

எவ்வாறாயினும், தனது 2 வருட காலப்பகுதியில் மூன்று பிரதமர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். நான் காவது பிரதமரை காண எதிர்பார்க்கவில்லை எனவும் தெரிவித்தார்.

எதிர்க்கட்சி உறுப்பினர்களின் பேச்சுக்களை அரசாங் கம் நசுக்க முற்பட்டால் அது மீள முடியாத தவறு எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ)

# வன்னி, கிழக்கு, மலையக மாணவர்கள் யாழ். இந்துக் கல்லூரியில் கற்க வாய்ப்பு

யாழ்ப்பாணம், செப். 08

வன்னி பிரதேசம், கிழக்கு மாகாணம் மற்றும் மலையக பகுதிகளை சேர்ந்த பொருளாதார ரீதியில் பின் தங்கிய உயர்தர விஞ்ஞான பிரிவில் கல்வி கற்க யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி வாய்பை ஏற்படுத்தியுள்ளது.

இது தொடர்பில் அந்தப் பாடசாலையின் அதிபர் செய்திக் குறிப்பு ஒன்றை விடுத்துள்ளார். அதில்,

வன்னி பிரதேசம், கிழக்கு மாகாணம் மற்றும் மலையக பகுதிகளை சேர்ந்த பொருளாதார ரீதியில் பின் தங்கிய உயர்தர விஞ்ஞான பிரிவில் கல்வி கற்க ஆர்வமுள்ள மாணவர்கள் எமது பாடசாலையில் இணைந்து கல்வி கற்பதற்கான ஒரு சந்தர்ப்பத்தை யாழ். இந்துக் கல்லூரி ஏற்படுத்தி தருகின்றது.

அவர்களுக்கான விடுதி வசதியை இலவசமாக வழங்குவதுடன் பாடசாலை நேரத்துக்கு மேலதிகமான கற்பித்தல் நடவடிக்கையையும் மேற்கொள்வதற்கு எமது ஆசிரியர்கள் தயாரகவுள்ளனர். தேவைப்படுமிடத்து மாணவர்களுக்கான மேலதிக பொருளாதார உதவிகளையும் வழங்க தயாரகவுள்ளோம்.

2024 உயர்தர பிரிவுக்கு 30 மாணவர்களுக்கான அனுமதியை வழங்கவுள்ளோம். எனவே ஆர்வமுள்ள மாணவர்கள் விண்ணப்பிக்கவும். விண்ணப்பங்களை principal@jhc.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்ப முடியும் - என்றுள்ளது. (ஐ)

## 13 தமிழ் அரசியல்...

என்று குற்றஞ்சாட்டப்பட்டு அண்மையில் கைது செய்யப்பட்டவர்களே விடுவிக்கப்படுகின்றனர்.

எனினும், சர்வதேசத்துக்கு காட்டும் வகையில், பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்களை விடுவிப்பதாக அரசாங்கம், பொய் கூறி வருகிறது என்றும் கஜேந்திரன் எம். பி. இதன்போது குறிப்பிட்டார். (ஐ)

## பைசர் தடுப்பூசி...

என்று சுகாதார அமைச்சகம் மீண்டும் மீண்டும் கூறி வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதன் தீவிரத்தை வெளிக்காட்டி தடுப்பூசியை எடுத்துக் கொள்வதில் மக்கள் அதிக ஆர்வம் காட்ட சுகாதார அமைச்சு அதிக கவனம் செலுத்த வேண்டும் என்பதை ஒப்புக்கொள்கிறேன் எனவும் அவர் கூறினார். (ஐ)

## பிரிட்டன்...

ராக கன்சர்வேட்டிவ் பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கை வம்சாவழியை சேர்ந்த ரணில் மல்கம் ஜெயவர்த்தன நியமிக்கப்பட்டுள்ளார்.

மே 2020 முதல் செப்ரெம்பர் 2022 வரை, ரணில் மல்கம் ஜெயவர்த்தன பிரிட்டனின் சர்வதேச வர்த்தக அமைச்சராகப் பணியாற்றி இருந்தார்.

1986 ஆம் ஆண்டு பிரித்தானியாவில் பிறந்த ரணில் ஜெயவர்த்தன 2015 ஆம் ஆண்டு முதல் தற்போது வரை வட கிழக்கு ஹம்ப்ஷயரை பிரதிநிதித்துவப்படுத்தி பிரித்தானிய பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

மே 8, 2015 அன்று நடைபெற்ற பிரிட்டிஷ் பாராளுமன்றத் தேர்தலில் 35,573 வாக்குகளைப் பெற்று பிரித்தானிய பாராளுமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பின்னர் 2017 பொதுத் தேர்தலிலும் ஜனவரி 2020 தேர்தலிலும் வெற்றி பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## அமைகிறது...

நிதிகள் பங்கேற்றனர்.

இதில் எட்டப்பட்ட உடன்பாட்டின் படி,

சபாநாயகர் தேசிய சபையின் தலைவராகவும், பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர், சபைத் தலைவர் மற்றும் ஆளும் கட்சியின் தலைமை அமைப்பாளர் ஆகியோர் அதிகாரபூர்வமாக அதன் உறுப்பினர்களாகவும் ஆவர்.

தேசிய சபையின் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 37 ஆகும். இதில் பாராளுமன்றத்தில் செயல்படும் அனைத்துக் கட்சிகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதிநிதிகள் உறுப்பினர்களாவர்.

இது தொடர்பான பிரேரணையை உடனடியாக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க கட்சி தலைவர்கள் கூட்டத்தில் இணக்கம் காணப்பட்டது. (ஐ)

## இலங்கை கடனை...

மிகமோசமான நிதிப் பேரழிவிலிருந்து விடுபடுவதற்கான போராட்டத்தில் ஈடுபட்டுள்ள இலங்கை கடந்த மாதத்தின் இறுதி வாரம் 290 கோடி டொலர் கடனுதவி தொடர்பாக சர்வதேச நாணய நிதியத்துடன் இணக்கப்பாட்டை எட்டியிருந்தது.

கடன்வழங்கிய நாடு என்ற அடிப்படையில் அமெரிக்கா இலங்கையின் கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகளில் பங்கேற்க முடியும் என செவ்வாய்கிழமை எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ள யெலென் இலங்கைக்கு கடன் வழங்கிய அனைவரும் பேச்சுக்கள் மற்றும் மறுசீரமைப்பில் முழுமையாக ஒத்துழைக்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்துடன் இலங்கைக்கு உதவுவதற்காக அமெரிக்க திறைசேரி, பல்வேறு அமெரிக்க நிறுவனங்கள், ஸ்தாபனங்கள் சர்வதேச நிதி நிறுவனங்களுடன் பேச்சுக்களை மேற்கொள்ளும் எனவும் அமெரிக்க திறைசேரி செயலாளர் தெரிவித்துள்ளார். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# சீரற்ற காலநிலை பாதித்த மக்களுக்கு நிவாரணம்!

## பிரதமர் பணிப்பு

கொழும்பு, செப். 08

சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேவையான நிவாரணங்களை வழங்க நடவடிக்கை எடுக் மாறு பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலு வல்கள் அமைச்சின் செயலாளர் பிரியந்த மாயாதுன் னைக்கு பிரதமர் தினேஷ் குணவர்த்தன ஆலோ சனை வழங்கியுள்ளார்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற் கான வேலைத் திட்டத்தை திட்ட மிடுமாறு நாட்டில் உள்ள அனைத்து மாவட்ட செயலா ளர்களுக்கும் அமைச்சின் செயலாளர் மாயாதுன்ன பணிப்புரை விடுத்துள்ளார்.

மேலும் கடந்த மூன்று நாட்களில் சீரற்ற காலநிலை தொடர்பான சம்பவங்களில் இருவர் உயிரிழந்தனர் என் பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# சபாநாயகருடன் சந்திப்பு

கொழும்பு, செப். 08

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே, சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தனவை நேற்று பாராளுமன்றத்தில் சந்தித்தார்.

பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக தச நாயக்கவும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டார்.

இரு நாடுகளுக்கும் இடையேயான சுற்றுலாத் துறையை மேம்படுத்துவது மற்றும் உயர்கல்வி வாய்ப்புக்களை விஸ்தரிப்பது குறித்து இச்சந்திப்பில் கலந்துரையாடப்பட்டதாக சபாநாயகர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

சந்திப்பின்போது இலங்கைக்கு இந்திய அரசாங்கம் வழங்கி வரும் தொடர்ச்சியான ஆதரவுகளுக்கு சபாநாய கர் நன்றி தெரிவித்திருந்தார். அத்துடன், பல்வேறு துறைகளில் இரு தரப்பு உறவுகளை மேலும் மேம்படுத் துவது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது. (ஐ)

# சஹ்ரானின் மனைவி உட்பட ஆறு பேருக்கு விளக்கமறியல்

கொழும்பு, செப். 08

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் தேசிய தௌஹீத் ஜமாத் தலைவர் சஹ்ரான் ஹாசிமின் மனைவி உட்பட ஆறு பேரை எதிர்வரும் 21 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு கோட்டை நீதிவான் நேற்று உத்தரவிட்டார்.

சஹ்ரான் ஹாசிமின் மனைவி அப்துல் காதர் பாத்திமா ஹாதியா, 2019 ஏப்ரலில் சாய்ந்தமருது குண்டுவெடிப் பின் பின்னர் கைது செய்யப்பட்டு தற்போது விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சந்தேகநபர்கள் 6 பேரும் ஸ்கைப் தொழில்நுட்பத் தின் ஊடாக முற்படுத்தப்பட்ட பின்னர் அவர்களை மேலும் விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு கோட்டை நீதிவான் திலின கமகே உத்தரவிட்டுள்ளார்.

சந்தேகநபர்கள் தற்போது பூசா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். (ஐ)

# முல்லை. கடலில் மீன்பிடித்த 12 இந்திய மீனவர்கள் கைது!

முல்லைத்தீவு, செப். 08

இலங்கை கடல் எல்லைக் குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் இந்திய மீனவர்கள் 12 பேர் படகுடன் கைது செய்யப்பட்டுள் ளனர்.

இவர்கள் முல்லைத்தீவு - அளம்பில் கடற்பரப்பில் வைத்து நேற்று முன்தினம் மாலை கைது செய்யப்பட்ட னர் என்று கடற்படை தெரி வித்துள்ளது.

அவர்கள் பயணித்த படகில் இருந்த மீன்பிடி உபக ரணங் களையும் கடற்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்ட மீன வர்கள் திருகோணமலை கடற் படை முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டு, மேலதிக விசார ணைகளுக்காக நீரியல் வளத் திணைக் கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர். (ஐ)

# அமைதிப் படை காலத் தலையீடுகளும் இலங்கைக்குள் சீனா நுழைய காரணம்!

## இந்திய முன்னாள் தளபதி தெரிவிப்பு

சென்னை, செப். 08

இந்திய அமைதிப் படை விடுதலைப் புலிகள் காலத் தில் இருந்ததைப் போல, இந்தியா மீண்டும் இலங்கை யின் உள்விவகாரங்களில் தலையிடக்கூடாது. இது இந்தியாவை ஓரங்கட்டுவதற்கு வழிவகுத்தது மற்றும் சீனா இலங்கைக்குள் நுழைவதற்கான இடத்தை உரு வாக்கியது - என்று இந்திய இராணுவத்தின் ஓய்வுபெற்ற லெப். ஜெனரல் சங்கர் தெரிவித்தார்.

அத்துடன், "ஜப்பான் இலங்கையில் ஆழமான வேர்க ளைக் கொண்டுள்ளது மற்றும் மக்கள் சார்பு திட்டங் களை செயல்படுத்தி வருகிறது. சர்வதேச நாணய நிதியத் தின் ஆதரவைப் பெறுவதற்கு இந்தியாவும் ஜப்பானும் இலங்கைக்கு ஆதரவாக நிற்கின்றன", இந்திய பீரங்கி படையணி தளபதியாக பணியாற்றி ஓய்வுபெற்ற லெப். ஜெனரல் சங்கர், இலங்கையில் சீனாவின் தாக்கத்தை முறியடிக்க இந்தியாவும் ஜப்பானும் ஒன்றிணைய முடி யும் என வலியுறுத்தியுள்ளார்.

சென்னை சீன ஆய்வு மையம் (C3S) ஏற்பாடு செய்தி ருந்த நிகழ்ச்சியில் அவர் பேசினார்.

இதன்போது, இலங்கையில் இந்தியாவின் இரட்டை நலன் குறித்து, இலங்கையின் ஸ்திரத்தன்மை மற்றும் பிராந்தியத்தில் சீன செல்வாக்கை ஓரங்கட்டுவது பல் வேறு விடயங்களை சுட்டிக்காட்டி உரையாற்றினார்.

இலங்கையின் சர்வதேச நாணய நிதிய பேச்சின் போது, இந்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் வாஷிங்டன் டிசியில் இருப்பதையும், இலங்கைக்கு தொடரும் இந்தியாவின் தாராளமான உதவியையும் அவர் சுட்டிக் காட்டினார்.

"ஜப்பானும் இலங்கையும் 1952ஆம் ஆண்டு முதல் நல்லுறவைக் கொண்டிருக்கின்றன, ஜப்பான் இலங்கை யின் முக்கிய கடனாளியாகும். ஜப்பான் மானியங்கள், கடன் உதவி, தொழில்நுட்ப ஒத்துழைப்பு, ஐ. நா. முகவர்கள், உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் ஜப்பானிய மற்றும் சர்வதேசம் மூலம் ஆதரவை வழங்குகிறது.

தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், உயர்தர உள்ள டக்கிய வளர்ச்சியை ஊக்குவித்தல், உள்ளடக்கிய வளர்ச்சிக்கான வளர்ச்சி ஒத்துழைப்பு, பாதிப்புகளைத் தணித்தல் மற்றும் சுனாமி நிவாரணம் ஆகியவற்றை உள்ளடக்கிய பன்முகப்படுத்தப்பட்ட நடவடிக்கையை ஜப்பான் எப்போதும் கொண்டுள்ளது.

"ஐ. எம். எவ். பிணை எடுப்பு வருவதற்கும், இந்தியா வுடன் மூலோபாய ரீதியாக ஒன்றிணைவதற்கும் அமெ ரிக்காவின் ஒப்புதல் அவசியம். இந்தோ-பசுபிக் மூலோ பாயத்தை வலுப்படுத்தும் இந்த வாய்ப்பை அமெரிக்கா இழக்காது. இந்தியா மற்றும் ஜப்பானுடன் இணைந்து செயல்படுவதன் மூலம் சீனாவின் செல்வாக்கை எதிர் கொள்ள அமெரிக்கா முயற்சிக்கும்," என்று அவர் கருத்து தெரிவித்தார். (ஐ)

# யாழ். யுவதியிடம் பாலியல் லஞ்சம் கேட்ட கட்சி அமைப்பாளர் கைது!

கொழும்பு, செப். 08

அரச வேலை பெற்றுத் தருவதற்காக இளம் பெண்ணி டம் பாலியல் இலஞ்சம் மற்றும் 50 ஆயிரம் ரூபாய் பணம் கோரிய இலங்கை ஐக்கிய முன்னணியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் உட்பட இரு சந்தேக நபர்களை எதிர்வரும் 21ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கு மாறு, கொழும்பு பிரதான நீதிவான் ஹர்ஷண கெகுண வெல நேற்று உத்தரவிட்டார்.

கல்முனையில் வசிக்கும் இலங்கை ஐக்கிய முன்னணி யின் யாழ். மாவட்ட அமைப்பாளர் முஹமது காசிம் முஹமது மற்றும் அவரின் செயலாளரெனக் கூறப்படும் கொழும்பு 13 இல் வசிக்கும் எம். பி. எஸ்.லெப்பை செய்னுல் ஆப்தீன் ஆகியோரே கைது செய்யப்பட் டுள்ளனர்.

தன்னிடம் அரச வேலை கேட்டு வந்த யுவதியிடம் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய் இலஞ்சம் மற்றும் பாலியல் லஞ்சம் கேட்ட சந்தேக நபர், முதலில் ரூ. 50,000 பணத்துடன் தன்னை சந்திக்க வருமாறு தெரிவித் தார் என்று முறைப்பாட்டாளர் இலஞ்ச ஆணைக்குழு வில் செய்த முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளார்.

புறக்கோட்டையிலுள்ள உணவகம் ஒன்றில் வைத்து பணத்தைப் பெற முயன்றபோது, குறித்த இருவரும் கைது செய்யப்பட்டனர் என்று ஆணைக்குழு மன்றுக்கு அறிவித்தது. (ஐ)

# தந்தை செலுத்திய வான் சில்லுக்குள் அகப்பட்டு 2 வயது குழந்தை மரணம்!

திருகோணமலை, செப். 08

தந்தை செலுத்திய வான் சில்லுக்குள் சிக்குண்ட 2 வயது குழந்தை ஒன்று நேற்று பலியானது.

இந்தச் சம்பவம் திருகோணமலை - தம்பலகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாயன்மார் திடல் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருபவை வருமாறு:- தந்தை திருகோணமலைக்கு திருமண வைபவத்துக்கு செல்வதற்காக வீட்டில் வைத்து வானை பின்புறமாக எடுத்த போது, அதற்குள் சிக்குண்டு அவரின் பெண் குழந்தை சிக்குண்டு உயிரிழந்தது. ஆர். நசிட்றா என்ற குழந்தையே இவ்வாறு உயிரிழந்தது.

வான் தம்பலகாமம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதுடன், குழந்தையின் உடலம், திருகோணமலை பொது மருத்துவமனையில் வைக்கப் பட்டுள்ளது. (ஐ)

# இந்தியாவிலிருந்து திரும்பும் அகதிகளுக்கு அரச காணிகள்!

யாழ்ப்பாணம், செப். 08

இந்தியாவிலிருந்து இலங்கை திரும்பும் வட மாணத்தைச் சேர்ந் தவர்களுக்கு அரச காணி களை வழங்குவதற்கு உரிய நடவடிக்கை களை மேற்கொள்ளுமாறு வட மாகாண ஆளுநர் ஜீவன் தியாக ராஜா பணிப்புரை விடுத்துள்ளார்.

நாட்டில் இடம்பெற்ற உள் நாட்டு யுத்தம் காரணமாக தமிழ் நாட்டில் தற்போது சுமார் 58 ஆயி ரம் மக்கள் அகதிகளாக வசிக்கின் றனர். இவர்களில், சுமார் 3ஆயிரம் பேர் மீள இலங்கைக்கு திரும்ப வுள்ளனர்.

ஏற்கனவே ஒரு பகுதியினர் இலங்கை திரும்பியுள்ள நிலையில் படிப்படியாக தாய்நாட்டுக்கு வருகை தருபவர்களுக்கு சந்தர்ப் பங்கள் ஏற்படுத்திக் கொடுக்கப்ப டும் என்று ஆளுநர் குறிப்பிட் டுள்ளார்.

வருகை தரும் குடும்பங்க ளில் காணி அற்றவர்களுக்கு அரச நிலம் பகிர்ந்தளிப்பது தொடர்பில் நடவ டிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மேலும், இந்தியாவிலிருந்து வருகை தரும் இலங்கை மக்க ளுக்கு இந்திய அரசு வழங்கும் வீட்டுத் திட்டத்தின் நிதியை அதிகரிக்கு மாறு இந்திய அரசை கேட்டுள் ளோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, தமிழ்நாட் டில் உள்ள இந்தியாவுக்கான பிரதி உயர்ஸ்தானிகர் டி. வெங்கடேஷ் வரனுக்கு இந்த விடயம் மின்னஞ் சல் மூலமாக அறிவிக்கப்பட்டுள் ளது.

இதேநேரம், இந்தியாவிலிருந்து திரும்பவுள்ள 3024 குடும்பங்களுக்க 1,163ஏக்கர் காணிகளை வழங்க முடியும் என்று வடக்கு மாகாண காணி ஆணையாளர் சோதிநாதன் கடிதம் மூலம் ஆளுநருக்கும், பிரதம செயலாளருக்கும் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக் கது. (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 08.09.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.